182/18.

ஆறுமுகம்பிள்ளை பொது வைத்தியம்.

182/18 - ஆறுமுகப்பிள்ளை வைத்தியம்.

ஸ்ரீ. சுப்பிரமணியர், சித்தவைத்தியம்

ஸன்னாசிப் [illegible] பரங்கின்றும்

ரோகத்திரவியம்;

வைத்தியர்
எம். எஸ். இருமலைக்கொழுந்து ஆசாரி,
சித்த ஆயுர்வேத அவிழ்தசாலை,
11-B [illegible] தெரு,
மதுரை.

26

28

38

சிவபிரான் வணக்கம்

உலகிலத் தொழில் நடத்து வளந்தனி னிலைகொண்டே
யலகிலாக் கலைதன்னை யருட் சிவசத்தியாக்கி
நிலவிடு பாகம் வைத்து நித்திய வாழ்வளிக்கும்
குலவிய சிவத்தின் றாள்கள் குறித்து நாந்தொழுது மன்றே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வருத்திடுங் கரை வாய்ந்த மாண்பிரகாரமெல்லாந்
திருத்திட வுணர்ந்து தானே நுண்துகளாப் பிணியின்தன்மை
பொருத்திட வுணராநின்ற பயனுறு நோயாளனே
விருத்திசெய் யணிந்திருத் தைவிளம்புது மேநுங்கள் மன்றே.

திரிதோஷங்களின் தொழில்

வாதம்

வாதமானது அபானவாயுவைச் சேர்ந்து இடுப்பிட மாகக் கீழ்நோக்கி, கருமக் கொடுக்கிறப்பற்றி அங்கேயி க்கநிற்கு மென்னும் வாயுவாது என்புகளுக்கு, மேலே உள்ள 72000 நரம்புகளின் வழியாய் ரோமதுவார ங்கள் தோறும் புகுந்து மாங்கிசத்திற் படர்ந்து நின்று, நீர், மலம், வாயுக்களை முதலாயவற்றைக் கழியச் செய்யும்.

பித்தம்

பித்தமானது பிராணவாயுவைச் சேர்ந்து கண்டத்திலிட மாக நின்று இரைப்பை, நீர்ப்பை முதலாயவற்றின் தொ ழில்களை நடத்தும் பொருட்டு ஜீவாக்கினியை எழுப்பி இ தயத்தின் தொழிலை நடத்தும்.

சிலேத்துமம்

சிலேத்துமமானது சமானவாயுவைச் சேர்ந்து, சுழு முனையை இடப்பட மாகக்கொண்டு உச்சியினின்று இங்கு நவ உண்ணாக்கு, நிணம், மச்சை, இரத்தம், மூளை, பெருங் குடல், கண்கள் முதலாய பாகங்களிற் பரவிநிற்கும்.

ரோகியின் வாய் மொழிகளால் வாத பித்த சிலேத்தும

தொந்தா தொந்தங்களின் அறிகுறி.

வாததேகக்குறி

வாதத்தால் ஏற்பட்ட தேகம் கடினம், தடிப்பு, கறுமை அல்லது செம்மை, தேகத்தில் வாயு பெருக்கம், இற்றின் பக்காதல், தாதுநட்டம், தேகஉளைச்சல், அன்னஞ் செல்லாமை முதலாய குணங்கள் உடைத்தாயிருக்கும்.

வாதபித்ததேகக்குறி

வாதபித்தத்தால் ஏற்பட்ட தேகம் மெலிவு, கறுமை நிறம். பொய்யும் மெய்யும் கலந்து பேசல், மைதுன அபேட்சை, அறிவாண்மை, கோபம் ஆகிய இக்குணங்களை உடைத்தாயிருக்கும். அன்றியும் உண்ணும் பண்டங்களில் காரத் துவர்ப்பு முதலாய சுவைகளில் அதிக இச்சையையுடைத்தாயிருக்கும்.

வாதசிலேத்துமதேகக்குறி

வாதசிலேத்துமத்தால் ஏற்பட்ட தேகம் தடிப்பு, மதங்கொண்ட யானை போல் அசைந்து நடத்தல், செம்மை நிறம், மாதரிச்சை சகலகலைகளையும் அறியத்தக்க வல்லமை யோகப்பயிற்சி முதலாய குணங்களைப் பெற்றிருக்கும் இன்னும் உண்ணும் உணவுகளில் புளிப்பு, காரம் முதலாய சுவைகளில் அதிக இச்சையையுடைத்தாயிருக்கும்.

பித்ததேகக்குறி.

பித்தத்தால் ஏற்பட்ட தேகம் நிறம் வெண்மை, தேக வறட்சி அளவுகடந்து போதல், அற்பவுண்டி, சொற்ப நித்திரை, பெரியோர் தம்மிடத்தில் மதிப்பு, மனக்கொழுப்பும், பலகலைகளையும் சரிவரக் கற்றல் ஆகிய இக்குணங்களைப் பெற்றிருக்கும். அன்றியும் உண்ணும் உணவுகளில் புளிப்பு சுவையின் பேரில் அதிகவெண்ணம் உடைத்தாயிருக்கும்.

பித்தவாததேகக்குறி

பித்தவாதத்தினால் ஏற்பட்ட தேகம் செம்மை அல்லது வெண்மை நிறம், சுகந்த வாசனைகளில் அதிகப்பிரியம், அறிவுடைமை, குயிலின் குரலினை யொத்த தொனி, இனுக்கிமெல், தேவருட்டு முதலியவற்றைப் பெற்றிருப்பதுடன், உண்ணும் உணவுகளில் காரம் புளிப்பு முதலியவைகளில் அதிக ஆவல் கொண்டிருக்கும்.

பித்த சிலேத்தும தேகக்குறி

பித்த சிலேத்துமத்தினால் ஏற்பட்ட தேகம் சண்பகப்பூ நிறமான மேனி, அளவுகடந்த மோகம், இனிமை தரத்தக்க குரலோசை, கற்றதை ஆராய்க்கும் நிலைவண்ணம், நிதி யாக யோக அப்பியாசம், பற்றியதை இரட்சிக்கும் தர்ம சிந்தை முதலியவற்றைப் பெற்றிருக்கும்.

சிலேத்தும தேகக்குறி

சிலேத்துமத்தினால் ஏற்பட்ட தேகம் சிவப்பு, கொடுமை, வியர்த்தல், மோகம், கொடூரமான கோரவோசை, அடக்கமெக்கெம், பொய்யை மெய்போல் பேசல் ஆகிய இக்குணங்களையுடைத்தாயிருப்பதுடன் உண்ணும் உணவுகளில் இனிப்பான சுவையை அதிகப்பிரியப்படும்.

சிலேத்தும பித்த தேகக்குறி

சிலேத்தும பித்தத்தினால் ஏற்பட்ட தேகம் சிவப்பு அல்லது பசுமை நிறம், செந்நிறமான தேக ரோமங்கள், வெடிப்பான குரலோசை, சத்தியநெறி, வீரியம் முதலியவற்றைப் பெற்றிருப்பதுடன் உண்ணும் உணவுகளில் இனிப்பு புளிப்பு முதலியவைகளில் அதிக இச்சையுடைத்தாயிருக்கும்.

சிலேத்தும வாத தேகக்குறி

சிலேத்தும வாதத்தினால் ஏற்பட்ட தேகம் துடிப்பு, கருமை அல்லது செம்மை நிறம், போகப்பிரியம், யோக முதலிய சாதனைகளைக் கற்றறிதல் பலகலைகளை ஆராய்தல், பெரியோர்த்தமை ஆதரித்தல் தருமியம், முதலியவற்றை உடைத்தாயிருப்பதுடன் உணவுகளில் புளி காரம் முதலிய சுவைகளில் மிகுந்த இச்சை கொண்டிருக்கும்.

இதுவரையும் திரிதோஷங்களினும் அவைகளின் தொ

தொந்தாதொந்தங்கள் அறிதல்.

வாததேகக்குறி

வாதத்தால் எடுத்த தேகம் கடினம், தடிப்பு, கருமை அல்லது செம்மை, தேகத்தில் வாயு பெருக்கம், இற்றின் பக்காதுல் தூக்கமட்டம், தேகஉளச்சல், அன்னஞ்செல்லாமை முதலிய குணங்கள் உடைத்தாயிருக்கும்.

வாதபித்ததேகக்குறி

வாதபித்தத்தால் எடுத்த தேகம் மெலிவு, கருமைநிறம். பொய்யும் மெய்யும் கலந்து பேசல், மைதுன அபேட்சி, அறிவின்மை, கோபம் ஆகிய இக்குணங்கள் உடைத்தாயிருக்கும். அன்றியும் உண்ணும் பண்டங்களில் காரம், துவர்ப்பு முதலிய சுவைகளில் அதிக இச்சையுடைத்தாயிருக்கும்.

வாதசிலேத்துமதேகக்குறி

வாதசிலேத்துமத்தால் எடுத்த தேகம் தடிப்பு, மரங் கொண்டவனைப் போல் அசைந்து நடத்தல், செம்மை நிறம், மாதுர்ச்சை சகலகலைக்கியானங்களும் அறியத்தக்க வல்லமை யோகப்பயிற்சி முதலிய குணங்களைப் பெற்றிருக்கும் இன்னும் உண்ணும் உணவுகளில் புளிப்பு, காரம் முதலிய சுவைகளில் அதிக இச்சையுடைத்தாயிருக்கும்.

பித்ததேகக்குறி.

பித்தத்தால் எடுத்த தேகம் நிறம் வெண்மை, தேக வற்ட்சி அடைந்துபோதல், அறிவுண்டு, சொற்ப நித்திரை, பெரியோர் தம்மிடத்தில் மதிப்பு, மனக்கொழுப்பும், பலகலைகளையும் சரிவரக் கற்றல் ஆகிய இக்குணங்களைப் பெற்றிருக்கும். அன்றியும் உண்ணும் உணவுகளில் புளிப்பு சுவையின் பேரில் அதிக எண்ணம் உடைத்தாயிருக்கும்.

பித்தவாததேகக்குறி

பித்தவாதத்தால் ஏற்பட்ட தேகம் செம்மை அல்லது வெண்மை நிறம், சந்துவாதங்களில் அதிகப்பாரியம், அறிவுடைமை, தீயாவின் திறலினை யொத்த தைரணி, தனுக்கிணைமல், தேவருட்டு முதலாயவற்றைப் பெற்றிருப்பதுடன், உண்ணும் உணவுகளில் காரம் புளிப்பு முதலாயவைகளில் அதிக ஆவல் கொண்டிருக்கும்.

பித்தசிலேத்துமதேகக்குறி

பித்தசிலேத்துமத்தினால் ஏற்பட்ட தேகம் சண்பகப்பூ நிறமான மேனி, அளவுகடந்த மோகம், இனிமை தரத்தக்க குரலோசை கற்றதை ஆய்கிக்கும் நல்லெண்ணம், நீதி நியாயப்போக்கு அப்பியாசம், பல்லுயிரையும் இரட்சிக்கும் தர்ம சிந்தை முதலாயவற்றைப் பெற்றிருக்கும்.

சிலேத்துமதேகக்குறி

சிலேத்துமத்தினால் ஏற்பட்ட தேகம் சிவப்பு, கொழுமை, வியர்த்தல், மோகம், மெதுவான குரலோசை, அடக்கமொழுக்கம், பொய்யை மெய்போல் பேசல் ஆகிய இக்குணங்களையுடைத்தாயிருப்பதுடன் உண்ணும் உணவுகளில் இனிப்பான சுவையை அதிகப்பாரியப்படும்.

சிலேத்துமபித்ததேகக்குறி

சிலேத்துமபித்தத்தால் ஏற்பட்ட தேகம் சிவப்பு அல்லது பசுமை நிறம், செந்நிறமான தேக ரோமங்கள், வெடிப்பான குரலோசை, சத்தியநெறி, ஞானவியம் முதலாயவற்றைப் பெற்றிருப்பதுடன் உண்ணும் உணவுகளில் இனிப்பு புளிப்பு முதலாயவைகளில் அதிக இச்சையுடைத்தாயிருக்கும்.

சிலேத்துமவாததேகக்குறி

சிலேத்துமவாதத்தால் ஏற்பட்ட தேகம் தடிப்பு, கருமை அல்லது செம்மை நிறம், போகப்பாரியம், யோகமுதலாய சாதனையைக் கற்றறிதல் பலகலைகளை ஆராய்தல், பெரியோர்தம்மை ஆதரித்தல் தைரியம், முதலாயவற்றை உடைத்தாயிருப்பதுடன் உணவுகளில் புளி காரம் முதலாய சுவைகளில் மிகுந்த இச்சை கொண்டிருக்கும்.

இதுவரையாரும் இதிரோதங்களினும் அவைகளின் தேக

ந்துக்களினாலும் இச்சரீரத்தில் உண்டான வேறுபாடு
களை உரைத்தோம் இதின்மேல் அத்திரிதோஷப் பாகுபா
டுகளினால் அந்தந்த தேகிகட்கு உண்டாகும் ரோகங்களை
க் கேட்பாயாக.

வாததேகிகட்கு வரும் ரோகம்

இடும்பிடிப்பு, வயிறுப்பல், வாயுமிரட்சி, கிராணி, மகோதரம், பிரமை, சூலை, அண்டவாதம், நீர்கிரிச்சனம், மூலரோகம், முதலாயவைகளாம்.

வாதபித்ததேகிகட்கு வரும் ரோகம்

உஷ்ணவாயு, வாந்தி, செரியாமை, ஏப்பம், நீர் எரிச்சல், தாதுநட்டம், தேக உலர்ச்சல், சோம்பல், கைகால் அசதி, குன்மம், அக்கினிமந்தம், இவை முதலாயவைகளாம்.

வாதசிலேத்தும தேகிகட்கு வரும் ரோகம்.

இமர், உலர்ச்சல், இருமல், சுரம், ஜன்னி, வெட்டுசூலை, இத்துரோகம், ஈளை, மந்தாரகாசம், உள்விக்கு, புறவிக்கு, வீக்கம், முதலாயவைகளாம்.

பித்ததேகிகட்கு வரும் ரோகம்.

தேகவெப்பு, அஸ்திசுரம், உஷ்ணவாயு, அதிசாரம், பைத்தியம், சோகை, தேக எரிச்சல், மனக்கலக்கம், தாகம், மயக்கம் தியக்கம், பெரும்பாடு, இரத்தபித்தமேகம், முதலாயவைகளாம்.

பித்தவாததேகிகட்கு வரும் ரோகம்

தாதுநட்டம், குன்மம், சூலை, கிராணி, வயிற்றிரைச்சல், செரியாமை, நீர்க்கோர்வை, ஆயாசம், மயக்கம், பேச்சை, முறைக்காய்ச்சல், வீக்கம், லேவாயு, முதலாயவைகளாம்.

பித்தசிலேத்தும தேகிகட்கு வரும் ரோகம்

அஸ்திசுரம், ஈளை, ~~(சுவாசகாசம், மந்தாரகாசம், சன்னி~~
~~சுரம், வாததோஷம், விக்கல், இத்துரோகம், காமாலை)~~

கண் காது மலம் மஞ்சளித்தல், வயிறு பொருமல், உளை மாந்தை, பிரசம், உத்துவீக்கம், காமாலை, சோகை, முதலியவைகளாகும்.

<u>இலேத்தும தேகிகட்கு வரும் ரோகம்.</u>

க்ஷயம், ஈளை, சுவாசகாசம், மந்தாரகாசம், சன்னி, சுரம், ஜலதோஷம், விக்கல், இருதயரோகம், கரப்பான், விரணம், மாரடைப்பு, தாக்கம், காமாலை, பாண்டு, சோகை, முதலியவைகளாம்.

<u>இலேத்தும பித்த தேகிகட்கு வரும் ரோகம்.</u>

வீக்கம், குளிர்சுரம், உளைச்சல், இருமல், வாந்தி, மாரடைப்பு, சுவாசம், விக்கல், பாண்டு, அதிசாரம், முதலியவைகளாம்.

<u>இலேத்தும வாத தேகிகட்கு வரும் ரோகம்.</u>

வயிற்றுப் பொருமல், கணுக்குவீக்கம், சுருதிவிக்கல், வலி, சன்னி, ஜலதோஷம், ஈளை, இருமல், சோகை, பாண்டு, சூலை, பக்கவாதம், முதலியவைகளாம்.

<u>வாத தேகிகட்கு உஷ்ணமிகின் வரும் ரோகம்</u>

அதிசாரம், உளைச்சல், பெரும்பாடு, அக்கினிமந்தம், கரப்பான், இரத்தப்பிரமேகம், நீர்க்கோவை, சூலை, முதலியவைகளாம்.

<u>வாத தேகிகட்கு வாயுமிகின் வரும் ரோகம்</u>

உள்வீச்சு, புறவீச்சு, நிமிர், ஆணித்துவாயு, பக்கசூலை, இடை நெருக்கு, வாயுபடக்கி நெஞ்சு நரம்பு முதலியவிடங்களில் வலி, நரம்பு புடைப்பு, தேகத்தில் குத்தல், மாரடைப்பு முதலியவைகளாம்.

<u>வாத தேகிகட்கு சீதளம் மிகின் வரும் ரோகம்.</u>

இரைப்புருமல், வலி, சன்னி, ஜலதோஷம், குளிர்காய்ச்சல், விரணம், வாந்தி, மயக்கம், சோர்வு, மலபந்தம், வீக்கம், சூலை, பாண்டு, நீர்வாதம், பக்கவாதம் முதலியவைகளாம்.

பித்ததேகிகட்கு உஷ்ணமிகின் வரும்ரோகம்.

க்ஷயம், அஸ்திசுரம், சத்தி, குன்மம், அதிசாரம், வயற்று
நோவு, மேலவாயு, நாக்குசப்பு, இரவிற்கனவு, பைத்தியம்,
எரிவு, தாகம் முதலாயவைகளாம்.

பித்ததேகிகட்கு வாயுமிகின் வரும்ரோகம்,

வாதகுன்மம், இசிவு, வாந்தி, விக்கல், அரோசகம், பைத்திய
ம், சகியாமை, புளித்த ஏப்பம், ஈரல்வலி, மார்புவலி,
தலைகிறுகிறுப்பு, அசதி, தாது நட்டம் முதலாயவைகளாம்

பித்ததேகிகட்கு சிலேற்பமிகின்வரும்ரோகம்

பசிமந்தம், மேலக்கடுப்பு, இருமல், வாந்தி, குளிர்சுரம்,
காமாலை, சோகை, வீக்கம், நாவுவழுப்பு, தூக்கம்,
முதலாயவைகளாம்.

சிலேத்துமதேகிகட்கு உஷ்ணமிகின்வரும் ரோகம்

க்ஷயம், இருமல், சுவாசகாசம், காப்புத்தி, நாசிரோ
கம், தொண்டைவலி, விக்கல், மந்தாரகாசம், முதலாய
வைகளாம்.

சிலேத்துமதேகிகட்கு வாயுமிகின்வரும்ரோகம்

குன்மம், மாரடைப்பு, சுவாசகாசம், குரல்கம்மல், நா
வறவறப்பு, வாய்நீரூறல், மலத்தோடுசீதம்காணுதல்,
தேகம்நெரிதல், திமிர்வாதம், வலி, இழுப்பு, பாண்டு, மய
க்கம், தியக்கம், விக்கல், முதலாயவைகளாம்.

சிலேத்துமதேகிகட்கு பித்தம்மிகின்வரும்ரோகம்

சுவாசமடைப்பு, மூர்ச்சை, மயக்கம், தாயக்கை, வி
க்கல், சன்னி, தோடம், வீச்சு, வயற்றுப்பொருமல் முத
லாயவைகளாம்.

சுரரோகத்தின் விபரம்.

மானிடர்களுக்கு உண்டாகும் எல்லாரோகங்களுக்கும்
சுரமானது அரசனாகவும் மனுக்கு ஒப்பாகவும் கூற

ப்பட்டிருக்கின்றது. இது சாம்பசிவன் தக்கனுடைய வேள்வியைத் தண்டிக்கும்பொருட்டு நெற்றிக்கண்ணிலிருந்து விடுத்த போது அதன் வேகமாகப் பாகத்துதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அது வாதசுரம், பித்தசுரம், சிலேத்துமசுரம், வாதபித்தசுரம், வாதசிலேத்துமசுரம், பித்தசிலேத்துமசுரம், ஆகந்துகசுரம், என ஏழுவகைப்படும். சிலநூல்களில் சந்நிபாதசுரத்தினையும் கூட்டி எண்வகையாகக் கூறப்பட்டிருக்கின்றது

சுரரோகத்தின் பூர்வரூபம்.

தேகசிலிர்ப்பு, தலைநோய், எக்காரியங்களிலும் அறிவு செல்லாமை, அசக்தி, இடுப்பு முழங்கால் கெண்டைகை நோதல், ஜீரணியாமை, அரோசிகம், கொட்டாவி, நாவறட்சி, தேகபாரிப்பு, இடும்பாகங்கள் மஞ்சள் நிறமாகவும், சிறுநீர் போதல் நாடிவாளைந்தோடல் முதலிய குணங்களெல்லாம் தனக்குப் பொதுவையே பெறக் கப்பெற்றுளதாம்.

1 வது வாதசுரம்.

முகமும் உதடும் கறுத்தல், தேகம் தடித்து நோதல், அதிதாகம், தேகம் காய்தல், தேகம் பாரித்தல், ரோமசிலிர்ப்பு என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

2 வது பித்தசுரம்

அதிகநித்திரை, மலம் நேத்திரம் சிவந்திருத்தல், வயிற்றுக் கழிச்சல், வாந்தி, வாந்தியிற் பித்தூற்றல், வாய்கசப்பு. மயக்கம், தாகம், எழுந்தோடல், விக்கல், தவிக்கல், சோர்ந்துப்படல் என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

3 வது சிலேத்துமசுரம்

நாவும் உடலும் வெளுத்துக் காணல், இருமல், இளைப்பு, வாய் துவர்ப்பு, உருசியின்மை, சுவாசக்கஷ்டம், விக்கல் தாகம், கெவாய் நோதல், இளைவு, மயக்கம், என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

4 வது வாதபித்தசுரம்

தேகம் வெளுக்கல், சர்வாங்க நோய், வாதகுத்தல், வயிறு பேசல், அசதியான நித்திரை, மலம் மஞ்சள நிறம் வெளுப்பாகவும் போதல், வாய் கசப்பு, வலுவுங் குன்றல், தயக்கம், மயக்கம் என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

5வது வாத சிலேத்தும சுரம்.

சர்வாங்க நோய், சுவாசம், இருமல், நாவெளுப்பு, ரோம சிலிர்ப்பு, மிடறு நோதல், தாகம், தயக்கம், அழுதல், பதற்றல், மலபந்தம், காய்ச்சல் என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

6வது பித்த சிலேத்தும சுரம்.

அதிக காய்ச்சல், வாய் பதற்றல், அசதியான நித்திரை, இருமல், மார்பு நோய், தாகம், தலைவலி, பக்கவலி, நா வழுவழுப்பு, உருசிவாசனை தெரியாமை என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

கவனிக்கவேண்டியது

வாதசுரமாதி பித்த சிலேத்தும சுரம் ஈ. ஒருவகையாய்ப்பட்ட ஆறுசுரங்களையும் தருணசுரமென்பர். இவையொன்பது நாட்குள் குணப்படும். இத்தகைய சுரங்களுக்கு ஆங்கிலேய மருத்துவர்கள் "சிம்பிள் பீவர்" Simple fever எனக்கூறுவர். இதனில் மச்சை தாதுவெனும் நரம்புகள் எளிதில் விகற்பமடைந்து ஆயாசம், கொட்டாவி, குளிர், தலைவலி, சர்வாங்கவலி முதலியவற்றையுண்டாக்கும்.

இதில் சரியான சிகிச்சை செய்யத் தவறின் சிலசமயம் சந்நிதோஷ சுரங்களாக மாறுதலடையும். இதை சந்நிரோகத்திற் பார்க்க.

7வது ஆகந்துக சுரம்

ஆகந்துக சுரமானது அடிபட்டு இன்னும் அநேக வர்க்கங்களின் காரணமாய் வாதமேலெழுவதாலும் இதுணைட் டோன்றுமாகக் கூறுவர். இதன் விபரம் பின்வருமாறு.

1. யு சுரம்.

தேகத்தில் இருதகண்டம் பெருநரம்புகளை வலித்தல், கண்ணுக்கொட்டு விழித்தல், கொட்டுதல்களினால், போசனம் அதிகம் விரும்பல், வேண்டியவைகட்கேங்கிப் பாட்டு ஆசைப்படல், ஆடல் பாடல் முதலிய தேறுதல்களுடன் மயிர்க்கூச்சம், நித்திரை முதலிய குணங்களையும் பெற்றிருக்கும். இது சுரத்தின் வேகத்தினால் நரம்பு Nervous என்னும் ஸ்பரிச நரம்பு விகற்பமடைந்து வாத பித்தத்தால் பலமாகி வளர்க்கும்.

2. அஜீரண சுரம்.

தேகம் காய்தல், இளைத்தல், மிக்க அக்கினிமந்தம், மார்பு தொண்டை முதலிய ஸ்தானங்களில் நோய், புளித்த ஏப்பம், வாந்தி, தாகம், பெருமூச்சு, வயிற்று நோய், வயிற்றுப் பொருமல், தேக இளைப்பு என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும். இத்தகைய சுரமானது ஆமாசயம், அக்கினியாசயம், பக்குவாசயம், மலாசயம், ஈரல் முதலிய ஜீர்ண உறுப்புகளின் தொழில் விகற்பமடைந்து உண்ட உணவு சரிவர ஜீர்ணிக்காமலும் மலங்கழியாமலும், உள் தங்கி நாற்றமுடைய காற்றென்னும் Foul gas பரப்பி தேகத்தின் சக்தியைக் கெடுத்து சுரமுண்டாக்குகின்றதென்று ஆங்கிலேய வைத்தியர்கள் கூறுவர்.

3 அபகாத சுரம்.

அதிக நடை, இரா யானை சவாரி, சுமை எடுத்தல், தேகம் சோர்வடைய வேலை செய்தல், பனியால் சஞ்சரித்தல், குத்து, காயம் முதலியவைகளால் மச்சை தாதுவும் இரத்த தாதுவும் கெட்டு வாயுக்களை, மேல்மூச்சு, சித்தப்பிரமை, வாயுவூறல், தேகநிறுக்கெடுதல், சர்வாங்க நோய், சுரம் என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

4 ஆகிக சுரம்.

அதிக குளிர் உண்டாதல், தேகம் வாடல், இருமல், தேகமெலிவு, தலை கண் முதலிய பாகங்களில் நோய், சர்வாங்க

நோய், அசுசியான நித்திரை, மயக்கம், தேகம் வெளுத்தல், வாடல், கண் பசாமை, வயிற்றுப் பொருமல், வாந்தி, உள்ளங்கைகண் முதலிய விடங்களில் எரிச்சல், தாகம், சுரம், வாய் பழுத்தல் என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

5 மாறல் சுரம்.

முதலில் குளிர்கண்டு பின்னர் சுரமுண்டு வியர்வை விடும். அப்பால் சுரமில்லாமலாகும். இங்ஙனம் தினவரின் ஏகாஹிக சுரம், ஒன்றுவிட்டொருநாள் வரின் த்வாஹிக சுரம், இரண்டுநாள் விட்டுவரின் திரிதாஹிக சுரம், மூன்று நாள் விட்டுவரின் சாதுர்த்திக சுரம், இப்படியே பதினைந்து நாட்கள் முடிவை மாற்றிக்கொண்டு முடிவை தவறாமல் வருவனவுமுண்டு. இவைகளெல்லாம் பொதுவில் மாறல் சுரம் அல்லது முறை சுரமென்பர்.

6 ஆகிக சீத சுரம்

தேகமெல்லாம் நொந்து அனல் போல் காய்தல், தலை முகவாய், புயம் முதலிய விடங்களில் வலி, நாவுமுதடும் வறு வறுப்பு, நித்திரை பங்கம், உடல் திமிர்த்து குளிர், சுரம், தாகம், மயக்கம் ஆகிய இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

ஆகிக சுரம், மாறல் சுரம் ஆகிக சீத சுரம் ஆகிய மூன்றையும். இன்டர்மிட்டெண்ட் பீவர். Intermittent fever அல்லது மலேரியா Malaria என ஆங்கிலேய மருத்துவர்கள் கூறுவர்.

தினந்தோறும் வருகிற சுரமாயின் காலை நேரத்திலும், ஒன்றுவிட்டொருநாள் வருகிற சுரமாயின் பகல் 12 மணிக்கு முன்னும், இரண்டு நாள் பூரணமாக சுரமில்லாதிருந்து 3 வது நாள் வருகிற சுரமாயின் பகல் 12 மணிக்கு மேலும் காணும். இச்சுரங்களுக்கு குளிர் வந்திருக்கும் போது உதடு காது மூக்கு முதலியவை கருநீலவர்ணமாகவும் நாவெளுத்து வறட்சி கொண்டிருக்கும். முதல் முதுகு முள்ளந்தண்டு வழியாக குளிர்

ஆரம்பத்து நேரமெல்லாம் பரவும். குளிர் நின்றபின்
பு நேரங்களும். காய்ச்சல் கூடும் சமயம் வியர்வை
யிருக்கும். இந்நிலையை சுரத்தில் பூரணமாக சுரம் விடா
மலேயே அடிக்கடி வியர்வை கண்டு சுரம் குறைவ
தும் சுரம் அதிகரிப்பதுமாக இருப்பின் ரிமிட்டண்ட்
பீவர். Remittent fever. என்பர்.

7 ஆமாதிசாரசுரம்

இருவகையாக ஆகுணங்கக்கும். சிலசந்தர்ப்பங்களி
லும் இரத்தம் மலத்தில் காணும் சுரம், தாகம், உடம்புவ
லி வெளுத்தல், கைகால் சோர்வு, வாய்கசப்பு, இவை
ல் ஆக இக்குணங்களைப் பெற்றிருக்கும். இதனை ஆங்கி
லேய வைத்தியர். டிசன்டரி. Dysentery. என்பர். இ
ந்நோயானது மலாசயமாகிய பெருங்குடலுட்
புறத்திலாகக்கின்று இலேத்தும சவ்வுக்கு நாசமும்
விரணமும் காணப் பெற்றிருக்கும். இதுவே. அக்யூட்
டிசன்டரி. Acute Dysentery. என்றும் ஆமாதிசா
ரமென்று கூறுகிறானே. இதுவும் இரத்தமும் மலத்
துடன் கலந்து போயமையக் குற்றி வயிற்றுமுக்க வேத
னையாகும். மலம் நீச்சல் பெற்றிருக்கும். சிலசந்தர்ப்
பம் சுரத்துடனும் சுரமில்லாமல் விசைந்தேடியுடனு
ம் இருப்பதுடன் பலமேந்திப்பும். இன்னும் நோயா
ன் வயிற்றின் இடது பக்கத்தை அழுத்திப்பார்க்கவே
தனையுண்டாக்கும். இந்நோயத்து ஆரம்பத்தில் கவ
னியாவிடில் கிரானியாக மாறுதலுடையும்; இதனை கிரா
னிக் டிசன்டரி. Chronic Dysentery. என்பர் இதைப்
பற்றி கிரானி நோயத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ள
வும்.

8 தாதுகதசுரம்.

முன்கூறப்பட்ட ஆகிக சுரம், மாறல் சுரம் ஆதிகசித சுர
ம் முதலிய வாறு சுரங்களைக் கண்டவுடன் ஏற்ற சிகிச்சை
செய்யாதிருப்பின் முதலாவ் ரசதாதுவிலும், ஏழுநாளைக்
கு மேல் இரத்ததாதுவிலும், இருபதுநாளைக்கு மேல்

மேதோதாது விடும், ஐந்து மாதத்திற்கு மேல் அஸ்தி தாது விடும், இரண்டு வருஷத்திற்கு மேல் மச்சை தாது விடும், மூன்று வருஷத்திற்கு மேல் சுக்கில தாது விடும் பற்றி வியாபிக்குமென்று கூறுவர்.

சில சந்தர்ப்பங்களில் விஷசுரத்தின் வன்மைக்கேற்றவாறு இவ்வாறாய் தாதுக்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கெடுத்து கடைசியாக மேதஸ், அஸ்தி, மச்சை, சுக்கிலம், இவைகளில் வியாபித்து சுரமானது தப்பாமற் கொல்லும். இத்தகைய சுரங்களை "கிரானிக் மலேரியா". Chronic malaria - என்று ஆங்கில வைத்தியர் கூறுவர்.

சுரத்தின் தசாவஸ்தை நிதானம்.

1வது கொஞ்சம் ஞாபக மிருத்தல், 2வது முன்னிருந்தவர்களைக் கண்ணிற் கண்டு பேசுதல், 3வது சித்தப்பிரமையாகுதல், 4வது மேல் மூச்சு வாங்கல், 5வது ~~சீதமுடுவதும் மரண~~ விழித்த விழி விழித்தபடியிருத்தல், 6வது மாறுசொலாகுதல், 7வது சீதமுடுவதும் மரணாவிக்கல், 8வது தன்கையால் மூக்குத் தடவிக் கொள்ளல், 9வது சீதமுடுவதும் இளைத்து மயிர்களைக் கோதுதல், 10வது தேகத்தைவிட்டு ஆவியானது நீங்குதல் என்றறிக.

இப்பத்தவஸ்தைகளில், மூன்றவஸ்தை வரைக்கும் சிகிச்சை செய்யலாமென்று தன்வந்திரியார் கூறியிருப்பினும், சிலநூல்களில் ஒன்பதவஸ்தைவரையாகும் சிகிச்சை செய்யலாமென்று கூறப்பட்டிருக்கின்றன. அப்படிச் சில சந்தர்ப்பங்களில் செய்து குணங் கண்டதையும் கண்கூடாகப் பார்த்திருக்கின்றோம். ஆகையால், கடைசிவரையாகும் ஏற்ற சிகிச்சை செய்து இருந்து பண்ணுதல் கடமையாகும்.

சுரம் விட்ட லக்ஷணம்.

னப்புறத்துங்களிலும் விண் அபேமகு. சரீரமெரிச்சல், கிறுகிறுத்தல், மேகுதாக்கரித்தல், அங்கவேதனை, மனசஞ்சலம் இவைகள் இல்லாமல், தேகத்தில் கிறுவு, பஞ்சேந்திரிய சுபாவம், வியர்வை, தும்மல், பசியுடன் அன்னத்தில் அபேட்சை, சிரசில் நமைச்சல் முதலாயவைகள் உண்டாயின், சுரம் விட்டதென்றறிக.

சந்நியான் பூர்வரூபம்.

இது, கழுத்து, நெற்றி, மார்பு முதலாய இடங்களில் வியர்க்கும். சுரங்கையும், இருதுப்பாரமை, தேகவாரிவு, தேவலி, கண் சிவத்தல், கண் பஞ்சடைதல், வாய் குழறுதல், மூர்ச்சை, மார்புவலி, தயக்கம், மயக்கச்சம், இருமல், விக்கல், சுவாசம் ஆகிய இக்குணங்களைப் பெற்றிருக்கும்.

நம் முன்னோர் வாதபித்தகபமாத்திரைகளின் அளவுபேதங்களால் சந்நிபாதசுரத்தை 13-விதமாகக் கூறியிருக்கின்றனர். அதன் விபரம் பின்வருமாறு.

1. கண்டகுப்ச சந்நிபாதசுரம்.

வாதமும் பித்தமும் அதிகரித்து சிலேத்துமம் குறைந்திருந்தால் பிறப்பது.

சிரப்பாரமை, தாகம், தலைசுற்றல், சந்தெரிதல், தொண்டைபோல் கழுத்து நரம்பு இழுத்துக்கொள்ளல், புலம்பல், பயப்படுதல், மூர்ச்சை, சர்வாங்க நோய், வாந்தி, இருமல், மார்புநுவு நோய் ஆகிய இக்குணங்களையுடையதெனவும், நிவர்த்தியாக 13 நாட் செல்லுமெனவும் கூறுவர். இதனை ஆங்கிலேய மருத்துவர் "செரிப்ரோஸ்பைனல் பீவர்". Cerebro-spinal fever என்பர்.

2 சந்திக சந்நிபாதசுரம்

வாதமும் சிலேத்துமமும் அதிகரித்து, பித்தம் குறைந்திருப்பது.

தேகங்குத்தல், உயர் சோபம், கால்வலித்தல், சிலேத்தும மறை இதயக்கம், கண்மேடல், தேகம் எரிச்சல், தேகக்குளிர்மை ஆகிய இக்குணங்களையுடையதெனவும், நிவர்த்தியாக 7 நாட் செல்லுமென்றும் கூறுவர்.

3. தாந்திரிக சந்நிபாதசுரம்

இலேத்துமமும் பித்தமும் அதிகரித்து, வாதம் குறைந்ததினால் பிறப்பது.

வாய் பிதற்றல், நாவு கறுத்தல், நாவில் முட் பாய்தல், நாவறளல், தாகம், வயிற்றுக் கடுச்சல், சுவாசம், கண்ணில் ஜலம் சொரிதல் சுரம் காய்தல் ஆகிய இக்குணங்களையுடையதென்றும், நிவர்த்தியாக 25 நாட் செல்லுமென்றும் கூறுவர்.

4. பக்னநேத்திர சந்நிபாதசுரம்

பித்தமும் இலேத்துமமும் குறைந்து, வாதம் அதிகரிப்பதனால் பிறப்பது.

சரீரமெல்லாம் குளிர்கை, கண் மேற்சுழலல், கண்ணீர் பாய்தல், தியக்கம், பார்வை மந்தம், கழுத்துப் பிறழ்கை, பிரலாபித்தல், தேக பாதை, அக்கினி போல் சுரங்காய்தல் ஆகிய இக்குணங்களையுடையதென்றும், நிவர்த்தியாக 8 நாட் செல்லுமென்றும் கூறுவர்.

5. ருக்தாக சந்நிபாதசுரம்.

வாதமும் இலேத்துமமும் குறைந்து பித்தம் அதிகரித்ததினால் பிறப்பது.

தேக எரிச்சல், சித்தப்பிரமை, கழுத்து நோதல், தேகமெல்லாம் குத்தல், தியக்கம், புரளல், உதடு உலர்தல், நெற்றியில் வியர்வை ஆகிய இக்குணங்களையுடையதென்றும் நிவர்த்தியாக 12. நாட் செல்லுமென்றும் கூறுவர். சில நூல்களில் 20 நாட் செல்லுமென்றும் கூறப்பட்டுள்ளது.

6. ஜிம்மக சந்நிபாதசுரம்.

வாதமும் பித்தமும் குறைந்து இலேத்துமம் அதிகரித்ததினால் பிறப்பது.

மேல்மூச்சு, தேக உஷ்ணம், தாகம், கைகால் எரிச்சல், நாவு கறுத்தல், நாவில் முட் பாய்தல், நாவு வெடித்தல், காது கேளாமை, வாய் கட்டல், தேகம் அனல் வீசல், தேக பாரிப்பு, விக்கல் ஆகிய இக்குணங்களையுடையதென்றும், நிவர்த்தியாக 16 நாட் செல்லுமென்றும் கூறுவர்.

7. பிரலாப சந்நிபாத சுரம்.

வாதம் அதிகரித்தும் பித்தம் கொஞ்சம் குறைந்தும், சிலேத்துமம் மிகுதியாக குறைவினால் பிறப்பது.
தேகம் அசைவு, புலம்பல், தேகவனல், தேகமெல்லாம் புண்ணாக நோதல், இருமல், அடித்து அடித்து விக்கல், மூர்ச்சை, மயிர் கூச்சம், கெம்வாடல், அலறுதல் ஆகிய இக்குணங்களையுடையதெனவும் நிவர்த்தியாக 14 நாட் செல்லுமெனவும் கூறுவர்.

8. அந்தக சந்நிபாத சுரம்.

வாதம் அதிகரித்தும் சிலேத்துமம் கொஞ்சம் குறைந்தும் பித்தம் மிகுதியாக குறைவினால் பிறப்பது.
நாவறட்சி, அதிக தாகம், தேகவெளிறு, பாரமை, தலைசுற்றல், வாய் பிதற்றல், இருமல், வாந்தி, விக்கல், ஆகிய இக்குணங்களையுடையதெனவும் நிவர்த்தியாக 10 நாட் செல்லுமெனவும் கூறுவர்.

9. ரக்தஷ்டீவி சந்நிபாத சுரம்.

பித்தம் அதிகரித்தும் வாதம் கொஞ்சம் குறைந்தும் சிலேத்துமம் மிகுதியாக குறைவினால் பிறப்பது.
நாவுதடு வெடித்தல், இரத்த வாந்தி, நெருப்பாக சுரம் காய்தல், வாய் வறளல், இரத்தப் பாரமை, தயக்கம், நினைவு தடுமாறல், தலைசுற்றல், நா கறுத்தல், காதுமந்தம், ஆகிய இக்குணங்களையுடையதெனவும், நிவர்த்தியாக 10 நாட் செல்லுமெனவும் கூறுவர்.

10. சித்தவிப்பிரம சந்நிபாத சுரம்.

பித்தம் அதிகரித்ததினால், வாதம் அதிகமாக குறைவதினாலும் சிலேத்துமம் சிறிது குறைவதினாலும் பிறப்பது.
தேகங் கறுத்தல், தேகம் நோதல், இரத்தப் பாரமை, நினைவழிவு, பாடல், வாய் பிதற்றல், சுவாசம், பேதி ஆகிய இக்குணங்களையுடையதெனவும், நிவர்த்தியாக 21 நாட் செல்லுமென்றும் கூறுவர். சில நூல்களில் 18 நாளில் குணமாகுமென்றும் கூறப்பட்டுள்ளது. இந்த வகைய சுரத்தினை ஆங்கில வைத்தியர் "டைபாயிட் அல்லது என்டிரிக் பீவர்: Typhoid or enteric fever எனக்கூறுவர். இச்சுர ரோகத்தில் பெரியால்வாறிப்போன் "டைபஸ் பீவர் Typhus fever என்பர். இச்சுரத்தில் நாவல் என்றும் மச்சை தாது வாண்வலிவு அதிகமாய்க் குறைந்தே

யும் விக்கல் பமடையும் ஆகையால் அதிக அசக்தியும்ப லவீனமும் சோம்பலும் விகாரமும் காணுகின்றன. இது ப்தினைந்து நாளிற்கு மேல் க்ஷேமமாகுங்குறிகள் ஏற்படும். அங்ஙனம் இல்லையாயின், கஷ்டசாத்தியமாகவேயும். தவிர, இச்சுரத்தில் மேலான சக்தி குன்றுவதால் உன்மத்தனைப் போல் தோன்றும். இதனின்று க்ஷேமமடைந்தோர்களில் சிலர்க்கு மேலான சக்தி சிறிது குறைவுபட்டுவிப்பதாகவும் தோன்றுகிறது.

11. சீதாங்க சந்நிபாதசுரம்

சிலேத்துமம் அதிகரித்ததினாலும் வாதம் அதிகமாகக் குறைவதினாலும் பித்தம் சிறிது குறைவதினாலும் பிறப்பது. தேகமெல்லாம் குளிர்மை, இருமல், இளைப்பு, அசதி, விக்கல், உடம்பு நோதல், வாந்தி, மூர்ச்சை, தேக அசைவு, பேதி, பதற்றல், புலம்பல், ஆகிய இக்குணங்களையுடையதென்றும். நிவர்த்தியாக 15 நாட்செல்லுமென்றும் கூறுவர்.

12. கர்ண்ணிக சந்நிபாதசுரம்

சிலேத்துமம் அதிகரித்ததினாலும் பித்தம் அதிகமாகக் குறைவதினாலும், வாதம் சிறிது குறைவதினாலும் பிறப்பது. வாய்பதற்றல், நாவெடுத்தல், நாக்கறுப்பு, பரவாபத்தல், நேக்கல், விக்கல், இளைப்பு, தேகவசைவு, செவிமந்தம், காதிரைச்சல், தலைபாரம், தாகம், துவிக்கல், ஆகிய இக்குணங்களையுடையதென்றும் நிவர்த்தியாக 90 நாட்செல்லுமென்றும் கூறுவர்.

13 அபிண்ணியாசசந்நிபாதசுரம்

வாதமும், பித்தமும், சிலேத்துமமும் சமமாக அதிகரித்ததனால் பிறப்பது.
இருமல், சுவாசம், சுரம், நாவறட்சி, நித்திரை, மயக்கம், தேகனரிவு, சடமெல்லாம் வியர்வை, பலவீனம் ஆகிய இக்குணங்களையுடையதென்றும், நிவர்த்தியாக 15 நாட்செல்லுமென்றும் கூறுவர்.
மேற்கூறப்பட்ட பேதியுடன் காணும் சீதாங்க சந்நிபாதசுரத்தினையும் பேதியல்லாமல் காணும் அபிண்ணியாசசந்நி

பாதசுரத்தினையும் ஆங்கிலேய மருத்துவர் "நியு மோனியா சுரம்" Pneumonia fever. எனக்கூறுவர். இத்தகைய சுரங்கள் அதிகரித்தால் கபஞ்சேர்ந்து சுவாசக்குழலின் கிளைகளுக்குள் சிறிய குழல்களிலும் பெரிய குழல்களிலும் சவ்வு போல் படிந்து, துருத்தி சுவாசக்கட்டுத்தால் இரத்தம் கெட்டு வலைந்து அரட்டல், புரட்டல், பக்கங்களால் பொருந்தாது இருமல், தேகம் விம்மல், பாதம் கால் முதலிய விடங்களில் வீக்கம் காணுதல் அசாத்தியமாக விருக்கும். கபம் பெருஞ்சுவாசக்குழல்களில் சேரின் பெரும்பாலும் சாத்தியப்படும். சிறு குழல்களில் சேரின் பெரும்பாலும் கஷ்டசாத்தியமாகும். விருத்தர்களுக்கும் சிசுக்களுக்கும் விசேடமாக சிறு குழல்களிலேயே காணுதலுண்டு. குழந்தைகளுக்குக் கண்டால், அன்று மாத்திரம், என்று கூறுவர். இவையுமன்றி இச்சுர ரோகத்தில் சுவாசாயத்தின் மேற்றையால் வீக்கம் கண்டால், நாபிக்கு மேல் 6 வது விலாவெலும்புக்கு இடையால் நோய்காணும். இருமல் காணும் பொழுதில் வாம் சுருக்கென நோவும். இதனை ஆங்கிலேய மருத்துவர் "புளூரிசி சுரம்" Pleurisy fever என்பர்.

சாதாரணமாய் நிமிஷத்திற்கு 16. 18 முறை சுவாசம் விடவேண்டிய அபாவமிருக்க இச்சுரத்தில் 35 முறைக்கு மேல் அதிகரிப்பதும், கைநாடியான் துடிப்பு சாதாரணமாக நிமிஷத்திற்கு 100 இருக்க, இச்சுரத்தில் 120க்கு மேல் 150 வரையால் சென்றிடுதலும் கஷ்டசாத்தியம் என்று அறிவிற் சிறந்த பெரியார் கூறியிருக்கின்றனர்.

சந்நிபாத சுரங்களில் சாத்தியா சாத்தியம்.

சந்நிகம், தாந்திரிகம், பாலாபம், இத்துவிப்பிரமை, ஜிம்மகம், கர்ண்ணிகம், இவையாவும் சாத்தியமாம். இவை தவிர்ந்த அந்தகம், ருத்தாகம், சிதாங்கம், கண்டகுப்ஜம், புக்நேத்திரம், ரக்தஷ்டீவி, அபிந்யாசம், ஆகிய ஏழும் அசாத்தியமாம். இவைகளில் பாலாபம்

அசாத்தியமென்றும், கஷ்டசாத்தியமென்றும் கூறப்பட்டுள்ளது.

தருண சுரத்திலேனும் சந்நிபாத சுரத்திலேனும் அபத்தியம் நேரிடினும், அல்லது வாதபித்த கபதோஷங்களுக்கு ஏற்ற சிகிச்சை செய்யாவிடினும் தோஷணே மேற்படும். அந்த தோஷமும், ஸ்ரும தோஷமும், விருமதித தோஷமும், பிரஜ்ஜிம்மக தோஷமும், சாத்துஜிம்மக தோஷமும், கிலெய்ணஜிம்மக தோஷமும், ஆகும் இவற்றின் விபரம் பின்வருமாறு.

1 அபத்திய தோஷம்

சீதளபதார்த்தங்களை உண்பதினாலும் மந்தப்படும்படியான உணவுகளைக் கொள்வதினாலும் வருவது.

மூர்ச்சை, பிரமை, அதிக தாகம், கருத்தின்றிப் புலம்பல், மார்பு நோதல் ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

2 சங்கம தோஷம்

ஸ்திரீ சஞ்சாரத்தால் வருவது. சர்வாங்க நோவு, மார்பெரிச்சல், அடிக்கடி எழுந்திருத்தல், விக்கல், புலம்பல், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், சித்தப்பிரமை ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

3 ஸ்ரும தோஷம்

கடுமையான சுரம், வாய் பிதற்றல், அதிக தாகம், வயிற்றெரிச்சல், மூர்ச்சை, வாதபித்த ஸ்லேஷ்மா கெடுதல், வியர்வை, தேகவருத்தியென்னும் இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

4 விருமதித தோஷம்

மயக்கம், சுரம் காய்தல், ஒரு தினத்திலே இரண்டு மூன்று தரம் குளிரோடு சுரம் காய்தல், அதிக தாகம், தலைநோவு, நாவில் முட்பாய்தல், பிரலாபம், சித்தப்பிரமை, புரளல் என்னும் இக்குணங்களையுடையதெனக்கூறுவர்

5 பிரஜ்ஜிம்மக தோஷம்

நாக்கு மஞ்சள் நிறமாக இருத்தல், நாக்கு வெடித்தல், நாவறட்சியுடன் முட்பாய்தல், அதிகதாகம், மூர்ச்சை, தியக்கம், மயக்கம், வாயசவை, வெப்பி, விக்கல், என்னும் இக்குணங்களையுடையதனைக் கூறுவர்.

6 இரத்தஜிம்மகரோகம்.

நாக்கு சிவந்து முட்போல திண்டு இருத்தல், காங்காய்தல், தாகம், எரிச்சல், என்னும் இக்குணங்களையுடையதனைக் கூறுவர்.

7 இலேஷ்மஜிம்மகரோகம்.

நாக்கு கறுத்து வரண்டு முட்போலாயிருத்தல், அடுக்கடுக முற்றியிருத்தல், சித்துப்பாரமை, தேகமெல்லாந்திணவு, வாயர்வை, சுவாசம், அழல், கோரமான தாகம், துடிப்பு, கைகால் அசதி, தேகங்கறுத்தல் என்னும் இக்குணங்களையுடையதனைக் கூறுவர்.

மேற்கூறப்பட்ட எழுவகையான ரோகங்களெல்லாம் அதிக சீதத்தினாலுண்டானதாகையால், சந்நிபாதசாத்திரினையே தழுவியதாகும். இந்நோயுற்றிருப்போர்த்திய கண் சிவத்தல், பசியின்மையாதல், தேகங்கறுத்தல், நாவு முட்பாய்தல், நாவு மஞ்சள் வெளுப்பு கறுப்பு இது ~~வாக~~ வாகிய நிறமடைதல் பாதகக்குறிகளாம்.

கவனிக்கவேண்டியவிதி.

மேற்கூறப்பட்டன்ன காரங்களெல்லாம் அவ்வவற்றிற்குரிய கலைவளவு போல இருந்து சாந்திப்படவேண்டியதிருப்பதினால், அதிக மருந்துகளின் மேலுங்கொடுத்து வயிற்றில் விரணமாகாதபடி அதிக ஜாக்கிரதையாக அப்போதைக்கப்போது தோஷப்பிரகோபங்களினால் உண்டாகிய கஷ்டங்களுக்குச் சிகிச்சை செய்து ரோகம் மேலிடாமல் பார்வையிட்டு வெகு திருத்தி பண்ணுதல் கடமையாகும்.

சுரரோகத்திற்காணுஞ்சிலவிபரீதகஷ்டம்.

சுரத்தின் பேரில் தலைவலி, ~~வலி~~

சுரத்தின் பேரில் மலம் சலம் கட்டு வீக்கம்.

சுரத்தின் பேரில் விக்கல்

சுரத்தின் பேரில் விக்கல், நாவறட்சி, முட்பாய்தல்,

சுரத்தின் பேரில் வாந்தி குமட்டல்.

சுரத்தின் பேரில் நாவறட்சி

சுரத்தின் பேரில் வாய் பதுந்தல்

சுரத்தின் மேல் மலச்சிக்கல்

சுரத்தின் பேரில் பேதி

சுரத்தின் பேரில் இருமல்

குன்மரோக பூர்வரூபம்

குன்மரோகமானது பித்தம் அதிகரித்ததினால் அதிகமாப்பம், மலபந்தம், வயிறு நிறைந்தது போலிருத்தல், துர்ப்பலம், உடல் காய்தல், வயிற்றில் அறுப்பக்கச்ச லேசாக உப்புசம், நோதல், அஜீர்ணம், வாந்தி, அதின்றும் இக்குணங்கள் கிடைத்துணக்குப் பயுருபேமாகப் பெற்றிருக்கின்றது. இது வாதகுன்மம், பித்தகுன்மம், சிலேத்தும குன்மம், சன்னி குன்மம், குலகுன்மம், எரிகுன்மம், சத்திகுன்மம், வலிகுன்மம் என எண்வகையாகக் கூறுவர்.

1 வாதகுன்மம்.

நடை குறைதல், மலச்சிக்கல், தேகங் கறுத்தல், உறக்கம், தியக்கம், தேகம் களைத்தல், உழலை, அரும்பெண்டு, சக்திக் குறைவு, கைகால் வேய்ச்சல், தலைவலி ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

2. பித்தகுன்மம்.

முகம் மஞ்சள் நிறம், ஏக்காளம், வாந்தி, மனக்கோளாறு, மயக்கம், நெஞ்சில் கோளாறு, தேகவலி, கைகால் வேய்ச்சல், வெய்யிலைக் கண்ணின் மயக்கம், இருதிர்வளத்திருத்தல், மற்றும், மிக்கவுடன் மலஞ் சொரதல், மேல் சுவாசம் ஆகிய

இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

3 சிலேத்தும குன்மம்

வயோல் சலம் ஊறுதல், இளைப்பு, தேகம் வற்றுதல், தேகங்க னத்தல், குர்ப்பலம், அன்னத்துவேஷம், நெஞ்சரித்தல், நெஞ்சிற்புகை கக்கியது போலத்தோன்றுதல், பயம், நடுக்கம், நெஞ்சுபாரம், ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

4 சத்திகுன்மம்.

தியக்கம், மயக்கம், குளிர், அன்னஞ்செல்லாமை, அடிவயிற்றிரைச்சல், வாய்நீர் சுரப்பு, வயிற்றுப்பசம், கரிச்சல், வறுமம், நெஞ்சில் புகைச்சல், அதிக சுவாசம், தேகங் கொதிச்சி திக்கிடல், வாய் துவர்ப்பு, ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர். இது பிற தோஷங்களின் வன்மையாற் பிறத்தலால் அசாத்திய மாகும்.

5 சூல குன்மம்

பக்ஷித்தவைகள் செரித்திடாது, ஆகாரஞ் செல்லாது, குடித்திக்கொண்ட காற்றைப் போல் வயிறு உப்பசமாகிப்பதுடன் அசதி, உளைவாய், நடைகுறைவு, கைகாலெரிச்சல், அடிவயிற்றில் குடல் புரண்டெழுந்து போல் குத்துதல் ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

6 எரிகுன்மம்

அடிவயிற்றில் எரிச்சல், குடல் புரட்டல், வாய் குமட்டல், வாய்நீரூறல், தலைவலி, வயிற்றுப்பசம், வயிற்றிரைச்சல், புளியேப்பம், வாயாமை, பேதி, சரீரம் இளைத்தல், எரிச்சல் அன்னஞ்செல்லாமை, இருமல், ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர். இந்நோய்தனை "ஹார்ட்பர்ன்" Heart Burn. என ஆங்கில வைத்தியர் கூறுவர்.

7. சத்திக குன்மம்.

ஈரலுக்குள் எரிவு, ஏக்கம், தியக்கம், மயக்கம், வாந்தி, வயிற்றுப்பசம், அடிவலி, சுக்கிலக் குறைவு, மலபந்தம், நடைக்குறைவு, சிறுநரம்புகள் புடைத்தல், தேகத்தில் திமிர் ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர், இந்நோய்தனை "பைரோசிஸ்" அல்லது "வாட்டர் பிராஸ்" Pyrosis or Water Brash என ஆங்கில வைத்தியர் கூறுவர்.

8. வலிகுன்மம்

வயிற்றில் கொள்ளிச் செருகியது போலிருத்தல், வயிற்றுப் பசம், நோவு, சரீரம் உலர்ந்து கறுத்தல், தாகம், அருபருண்டு, விலாச் சோகைகள், முதுகுத்தண்டு வலி, இடுப்பு நோய், தேகக் கடுப்பு, கடுமையான சுரம், பொய்ப் பசி என்னும் இக்குணங்களுடையதைக் கூறுவர். இதனை ஆங்கில மருத்துவர் குலைஎரிவு இரைப்பை இசிவு முதலியவைகள் இரைப்பை "கியாஸ்ட்ரோடைனியா" Castrodynia என்றும் வயிற்றில் குறுக்கல் ஏற்படுவன "கியாஸ்ட்ரால்ஜியா" castralgia என்று கூறுவர்.

பெரும்பாலும் நாட்களில் இந்த குன்மநோய்களை எட்டுவிதமென்றும் அறிகுறிக் குண்டாகின்ற இரத்தக் குன்மத்தோடெட்டு என்றும் கூறப்பட்டுக்கின்றன.

முன்னர் கூறப்பட்ட வாதகுன்மம் முதல் சத்திகுன்மம் ஈறாகவுள்ள நான்கோடு வாதபித்த குன்மம், வாதசிலேத்தும குன்மம். பித்தசிலேத்தும குன்மம், இரத்தகுன்மமெனப் பெரும்பாலும். இங்ஙனம் பெரும்பாலுமாக இரண்டுதாண்டு தோஷங்களின் தொந்தங்களிலேற்படுகின்றுமாதுறாண் குறிகளோடேட்டுள்ளனை ஆசிரியர் சூலகுன்மம், சாதிகுன்மம், அத்திகுன்மம், வலிகுன்மம் எனவகையறுத்துக் கூறியிருக்கின்றனர்.

ஆனால் அறிகுறிகளுக்குண்டாகும் இரத்தகுன்மத்தைப் பற்றியிங்குக் கூறப்படாமையால் இதனைக் கூறுவோம்.

இந்த இரத்தகுன்மத்தை இரத்தவாத குன்மம், இரத்தவாதபித்த குன்மம் என இருவகைப்படும்.

இரத்தவாதகுன்மம்

ஒருசில ஸ்திரீ ருது காலத்திலாவது, பிரசவித்த காலத்திலாவது, அல்லது எந்நேரத்திலும் மேகசம்பந்தமான ரோகங்களால் காலத்திலாவது வாததோஷத்தால் விருத்தியடையக்கூடிய வாயு மிக்க அபானமாக யுட்கொள்ள வழியுண்டாகிப்பது. இது மாதந்தோறும் அல்லோன் வெளியாகவேண்டிய உதிரத்தை உள்ளேயே மறித்து, வயிற்றில் கர்ப்பசம்பந்தமான குறிகளுண்டாகும். அப்போது இயற்கைக் குறிகளான இதயத்துடிப்பு, மார்பு அதிரல், மசக்கை,

ஆயாசம், ஸ்தனத்தில் கொஞ்சம் பால்சுரப்பு முதலிய குணங்கள் ஏற்படும், முன்பு மாறுபட்டுத் தோய்ந்த மாமிசத்தைப் போல் கெர்ப்பத்தில் திரண்டுகொண்ட கெட்ட ரத்தமானதால், அடிவயிற்றில் வலி, கட்டி அசைவற்றிருத்தல், அழற்சி, அதிசாரம், நோவருட்சி, சுரம் முதலியவைகளுடன், இன்னும் கெர்ப்பப்போன உதரத்தின் தன்மையை வளைக்கும் மாறு கர்ப்பையால் மிகவும் வலி, அல்லாமல் தூர்நீர்ப்பெருக்கு, துர்நாற்றம், சீழ்தல், வேதனை முதலியவற்றையுண்டாக்கும், அந்த உதரக்கட்டியானது கெர்ப்பம் போல் அவயவங்களில் அசைந்து துடிப்பதில்லை. ஒருகால் பண்டம் போலப் பருத்து வரின், ஏதேனும் சமயம் இறுகி துடிப்புண்டாகும். இந்த ரோகத்தில் வயிற்றுப் பருக்கச் செய்யாமல் உதரக்கட்டி மாத்திரம் பருத்துவரும்.

இரத்தவாதபித்தகுன்மம்

மேற்கூறப்பட்ட இரத்தவாதத்துடன் பித்தமும் மிகுதியாயின் இருக்கப்பட்ட கெட்ட ரத்தமானது மாதந்தோறும் வெளியாகும் அக்காலத்தில் அதிக உக்கிரமான தேகமு சரீரம் மரத்தல், எரிச்சல், பேதி, தாகம், சுரம், கெட்ட ரத்த முகக்கும் ஸ்தானத்தில் சித்திரவதையான குத்தல், மர்மஸ்தானத்தில் அதிக நோவு, அதில் எப்போதும் வேதனையுண்டாக்கும். இதனையே குதவாயுவெனக் கூறுவர். இத்தகைய ரோகங்களுக்கு கவனித்து சிகிச்சை செய்யவும்.

இங்கு வரையப்பட்ட குன்மரோகத்தை ஆங்கிலேய வைத்தியர் "டிஸ்பெப்சியா" Dyspepsia எனக் கூறுவர். இது தேகப் போஷணைக்காகக் கொள்ளப்பட்ட உணவு, ஆமாசயம் சென்று அதிலேயிருந்து முறையே அக்கினியாசயம் பக்குவாசயம் அடைந்து, ஈரலின் ஒருபக்கத்திலிருந்து உற்பத்தியாகிய சுடராக்கினி என்னும் பித்தத்தேஜசும் பந்தப்பட்டு ஜீரணமாக வேண்டும். இந்த சுடராக்கினிக் குறையாலும் அதிகரிப்பாலும் ரோகத்திற்குக் காரணமென்பர். இதனை "டெம்பரரி டிஸ்பெப்சியா" Temporary Dyspepsia "பர்மெனெண்ட் டிஸ்பெப்சியா" Permanent Dyspepsia என இருவகையாகக் கூறுவர். இவற்றுள் டெம்பரரி டிஸ்பெப்சியா ஏதேனும் கடின பதார்த்தத்தையுண்ணவோ அல்லது அதனை ஜீரணிக்கத்தக்க சுடராக்கினி இல்லாமையாலு

லேயோ இழிதென்று வயிற்றுவலி, வாந்தி முதலாயவை
கண்டு, பரிகாரத்துக்கு உடனே வசப்படும் பர்மனென்
ட்டுள்ளப்படியாக நாளுக்கு நாள் ஆமாசயம், அக்கினி
யாசயம், பக்குவாசயம் முதலாய பாகங்கள் வீங்கல்
பமடைந்து குன்ம ரோகத்திற் குண்டான குறிகளை
ல்லாம் உண்டாகும்.

சூலை

குதஸ்தானத்தையுடைய அபானவாயும் இருதயஸ்தா
னத்தையுடைய உதானவாயும் தங்களுக்கியற்கை
யில் விட்டு இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு
வயிற்றை விருத்தியுடன் இழுத்துக் கொள்ளும்; இன்னு
ம் வயிற்றிரைச்சல், மலபந்தம், சுரம், சுவாசம், முதலா
ய உபத்திரவங்களெல்லாம் தனக்குப் பதையுயலே
மாகப் பெற்று உடலில் வாதநாடிகள் நரம்புகள் பரிச
நரம்புகளில் பற்றி குத்துதல், இடைச்சல், வலி, வீக்கம் முத
லாயவைகளுண்டாக்கும் இதனை ஆங்கில மருத்துவ
ர்கள் இரண்டு விதமாகக் கூறுவர்

அதாவது:- நோயுள்ள இடத்தில் அழுத்தி முத்திப் பதுக்க
நோய் அதிகப்படுவன ~~[illegible]~~ Inflammatory ~~[illegible]~~
~~[illegible]~~. இன்பிலமேட்டரி. என்றும். நோய் பெரும்பா
றும் வலிக்கின். Irritative. இரிடேட்டிவ். என்றும் கூறு
வர். இந்த நோய் விட்டு விட்டுக் காணும் இரவில் அதிக
மாகிறுக்கும். இந்த ரோகம் நரம்புஸ்தானத்திலே
யே காணப்படுவதாக இருப்பதும், வேறு இடங்களி
ல் காணப்படுவதும் உண்டு. தொடர்ந்தமாகச் சைத்தியப்
ப் ருக்குப் புவேத்திலும். கல்லீரல் வியாதியால் தோன்றும்,
தமரகவாயு நோகத்தில் இடது கையாலும், விலாவாயும்
கர்ப்பாசய வியாதி முதலாயவைகளில் இருப்பதும், அன்
னாசய வியாதியால் தொடுகிறும், முழங்கையாண் மேலாக்கி
ன்ற நரம்புகளில் அழுபட்டால் அண்டவிரலிலும் நோயு
ண்டாக்கும். இத்தகையே அநேகம் உண்டு. இந்த சூலைரோ
கமானது இழிகின்று கண்டு இழிநென்று போய்விடும்.
மற்றியால் நோய் இராது எந்த ஸ்தானத்தில் நோய்கா
ணகிறதோ, அந்தந்த ஸ்தானத்தின் நோயான பரு
தானத்திற்கும் ஏற்றவாறு பெயரிட்டழைக்கின்றனர்.
இங்கு இந்த ரோகத்தைப் பதினெந்து விதமாகக் கூறப்பட்டு
ள்ளது அதாவது.

1 மேகசூலை

கைகால்கடுப்புடன் குடைச்சல், வயர்வை, மலபந்தம், சிவந்த மூத்திரம், சரீர இளைத்தல், தாகம், எரிச்சல், சுரம், மந்தம், பிரமை, மயக்கம், என்னும் இக்குணங்களையுடைய தெனக்கூறுவர்.

2 மூத்திரச்சூலை

ஆண்குறியாலும், இடுவயாற்றிலும், தொப்புக்குமேலும், அடிக்குடலிலும் ஓடி ஓடிக் குத்தல், தேகமெல்லாம் பரவிவலித்தல், நாபியைச் சுற்றி அசைந்து கடுத்து இடுத்தல், தலைபாரம் சுரம் கண் சிவந்து நீர் சொரிதல் ஆகிய இக்குணங்களையுடைய தெனக் கூறுவர்.

3 வாதசூலை

கைகால் உளைத்தல், நடுக்கல் குளிர், தாகம், அதிரல், கண் முழுங்கல், விலா இடுக்குகளில் கனத்தல், சிறுநீர் சிவந்து கடுத்துப் போதல், தேகமெல்லாம் குடைச்சல், நோவு என்னும் இக்குணங்களையுடைய தெனக்கூறுவர்.

4 பித்தசூலை

தேகம் வாட்டத்துடன் வேதனை, கைகால் உளைப்பு, சோர்வு, துடித்தல், பார்வை மந்தம், வாது மொந்து நடுத்தல், சுபாவநிறமாறல், மயக்கம், துர்ப்பலம், என்னும் இக்குணங்களையுடையதெனக்கூறுவர்.

5 சிலேத்துமசூலை

தொண்டையாலே வேதனையுடன் கபாதிக்கம், அடிவயாற்றில் நோவு, வியர்வை, நகக்கண்களில் ரத்தமில்லாமை, தேகம் பஞ்சைப்போல் மெதுவுடன் வெளுத்துப் புண்போல் வலித்தல், அடிவாயால் நீரேறல் என்னும் இக்குணங்களையுடைய தெனக்கூறுவர். வாதசூலையாதியாக சிலேத்துமசூலை ஈறாக உள்ள மூன்றினையும். கவுட். Gout. or மையால்ஜியா Myalgia என்பர்.

6 ஆமசூலை

புளிப்பு, தித்திப்பு, கசப்பு, இவையுள்ள வஸ்துகளை அதிகமாகப் புசித்ததினாலும், உபவாசத்தினாலும், ஆமாசயத்திலிருந்து சேர்ந்து வயாற்றிலும், விலாப்பக்கங்களிலும் வேதனையுடன் கடுத்தலையும் குத்தலையு முண்டாக்குமெனக்கூறுவர்.

7. சர்க்கராசூலை

முதுகு, விலாப்பக்கம், நெஞ்சு, அல்குல், நாபி, குதஸ்தானம், தொடைவாடங்களில் மாமிசம் வளர்தல், சலத்துவாரத்தில் பருக்கைக்கள் கல்லுகளைப்போல் மணல்கள் அடைத்துக் கொள்ளல், சரீர வேதனை, மனக்கலக்கம், ஆகிய இக்குணங்

களையுடையதெனக் கூறுவர்.

8 குன்மசூலை

முன்பு சூலைரோகத்தில் கூறப்பட்டுள்ள வாதகுன்மமா னது நீண்டகாலங்களிருந்து முடிவில் மலசலபந்தம், வாந்தி, வியர்வை, தாகம், ஏப்பம், மூர்ச்சை, வயிற்று வலி, என்னும் இக்குணங்களைத் தோற்றுமெனக்கூ றுவர்.

9 உலர்த்துசூலை

பித்த உஷ்ணத்தினாலும், அக்கினியாலும், வறட்சி யினாலும், தேகவாதத்தினாலும், குன்மத்தினாலும், பருத்த தேகத்தினுட்புறத்தில் உலர்த்தலுடன் குத்தல் வெளிப்புறத்தில் வீங்கித் தடித்தல், சர்வாங்க மும் நோதல் ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

10. திரும்பச்சூலை

பிரசவித்த காலத்தில் உதிரக்கட்டுடைத்ததாக வெளி ப்படுத்தாமையால், உள்ளேயே அடங்கியிருத்தும் சலமும் தேங்காய்க் குடுமியைப் போல் அங்கே யோனிவாயை அடைத்துக் கொள்ளும் போது பார்த் து, அவ்விடத்தில் குத்தல், அதை அசைத்தால் சி றுங்கல், உட்புறம் கனத்தல், சரீரம் தளர்ந்து உஷ்ணத்துடன் வெளுத்தல் ஆகிய இக்குணங்களையுடை யதெனக் கூறுவர்.

11. கருச்சூலை

உதிரம் பொங்கித் தோஷப் பற்றுவதினாலும், பற்றிய து நரம்புகளின் துவாரத்தில் தடைபட்டிருந்த தி லினாலும் உண்டாகிக் கீழ்முதுகையறுத்து அவ் விடத்தில் அதிகவலித்தல், கைகால் உளைப்பு, அறி வும் தெளிவும் கெடல் ஆகிய இக்குணங்களையுடைய தெனக் கூறுவர்.

12. கரசூலை

விலாவிடப்பக்கங்களிலும் இழுத்துக்கொண்டு நோதல், வாயால் மாந்து சலம் ஊறுதல், வாந்தி, தலைவேதனை அந்து

வாதத்தியால் பித்தம் வாடுதல், தேகமுழுதும் நோதல், நெஞ்செரிவு, உளைச்சல், வயிற்றைக் கிடுத்துப் பிடித்துடன் நோதல், அஜீரணம், மயக்கம், என்னும் இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

13 பக்கச்சூலை

பக்கத்தில் குத்துதல், இருமலுடன் அண்டத்தில் நோதல், சுரம், உடம்பு புண் போல் நோதல், தலைவலி, தேகம் கனத்தல், திமிர், நாக்கால் இச்சல், கண்ணிற் புகைக்கமெய்து போலத்தித்துல் ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்

14 கருப்பச்சூலை

இருமருந்து, வஞ்சனை, இணியம், பெருங்காயச்சூடு, பாரசுவாதத்து காலத்தில் தங்கிய அழுக்கு ஆகிய இவைகளினால் இது வயிற்றில் பத்து மாதம் உறைந்து, கருப்பத்தைப் போல் திரண்டு புரண்டு கொண்டு, அது வயிற்றில் குத்துதலுடன் நோயுண்டாக்குவதுமன்றி அனந்தசங்கடம் பாருக்குமெனக் கூறுவர்.

15. சூரச்சூலை

கெட்ட உணவுகளினால் வாய் நீரூறல், நெஞ்செரிவு, ஏப்பம், ஈரலைப்பற்றி பக்கத்தில் குத்துதல், இரகம் வயிறும் வீங்குதல், அது வயிற்றில் திரண்டு புரண்டு அடுக்கடு வந்து மார்ந்து ஒதுங்கினதும் போல், மாதாந்தர ஒது காலத்தில் கொஞ்சம் உதிரம் பட்டுச் சிக்கல் ஆகிய இக்குணங்களையுடையதெனக் கூறுவர்.

இதரசூலை

வாதபித்த சிலேத்தும மூன்றும் நின்று சூலைகளினும் உண்டானால் வாதத்துர்க்குணங்களையும் ஏககாலத்தில் உண்டாக்குமெனக் கூறுவர். இதுவுமன்றி சில நூல்களில் சூலைரோகத்தைப் பதினெட்டு வகையாகவும் கூறப்பட்டுள்ளன.

வாதரோக இயல்பு

கசப்பு, துவர்ப்பு, காரம் முதலியவற்றை அளவுக்கு மிஞ்சிப் புசித்தலினாலும், ஆறின அன்னத்தைப் புசித்தலினாலும், அதிகமாகப் பட்டினியிருப்பதனாலும், அதிகப்

பழமைகுமைப்பதிஞலும், பகல் நித்திரையாலும், இரா விழித்தலாலும், இந்நான்பகரதுஸ் கொள்வதிஞலும் பரவுகின்றது.

வாதம்வர்த்திக்குங்காலம்

இந்த ரோகமானது ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை, முதலான மாதங்களில் விசேடமாகப் பரவுகின்றது. இங்கு கூறப்பட்டுள்ள வாதங்கள் தம்பமுதலாய் நந்தவாய் ரீ.மூக உள்ள ரோகத்தை விசேடமாகப் பரித்திருக்கின்றனர்.

இங்ஙனம் கூறப்பட்டுள்ள வாதரோகம் எண்பத்தினுன் கினுள் நரம்புகளைப் பற்றி நோயுண்டாகும் ரோகங்களை எல்லாம் நியூரால்ஜியா. Neuralgia. குலரோகமென்றும் நோய் இல்லாமல் சரீரத்தின் ஓர் பாகத்திலாவது அல்லது பல பாகத்திலாவது பலம் கெட்டுப் போனால். பெராலிசிஸ். Paralysis. என்றும் அசையும் தன்மையற்றுப் போனால். பால்சி. Palsy என்றும் அங்கிலேயமருத்துவர் கூறுவர். இந்த ரோகத்தில் பலமும் அசைவும் கெட்டுவிட்டால் பெர்பெக்ட். Perfect. பூரணமானவாத ரோகம் என்றும். இரண்டுமொன்று கெட்டுவிட்டால். இம்பர்பெக்ட். Imperfect. சாமான்னிய வாதரோகமென்றும் கூறுவதுடன், நம்முன்னோர்கள் தங்களின்படியே ரோகத்தின் பாதாரணகுணத்தினையோ அல்லது இடத்தினையோ முன்னிட்டுப் பெயரிட்டிருக்கின்றனர்.

1 வாதஸ்தம்பம்

இது, வாதமேறுந்து பொங்கி காலண்புறுவடுதையைப் பற்றுதொடையும், வீங்கும், தேகமெங்கும் நோயுடன் திமிருண்டாக்கும், இது அதிக தூலமான வஸ்துக்களை மிகுதியாய்ப் புசிப்பதிஞலும் அருந்தேசரியான உஷ்ண வஸ்துக்களைப் புசியாமையாலும் இவைகளெல்லாம் ஒலைக்கின்ற கப்துதாதுக்களிய மேதசமித்து அப்பாகங்களை அடித்துக் கொள்ளச் செய்யும். அந்தரணம் எழுந்திருக்கும் நடையால் நோயுடன் நடக்க மாட்டாமல் ஏதுவும் ஆதலால் இதற்கு ஊருவாதமென்பர்.

2 வாதகண்டம்

இது பாதத்தை தூக்கும் போதும், வைக்கும் போதும் அவைகளில் சூலத்தை அப்பியது போலிருக்கும், கால் நரம்புகளில் கனத்து நிமிண்டாக்கும், குனியவும் நிமிரவும் வசப்படாது. காலாங் மத்தியும் கனத்தும் நோவுடன் ஒன்றோடொன்று அழுத்திக் கொள்ளத் தூண்டும். இது அதிக ஸ்திரமான ஸ்தானத்தில் வாசம் செய்வதினாலும் குளிர் காற்றிலே படுவதினாலும் பிறக்குது.

3 கரஸ்தம்பம்

இது இரண்டு கால் அடிகளி நெருப்பால் வைத்தாற் போல் எரிச்சல் உண்டாக்கும். தேகம் வெளுக்கும், உலரும், காலால் பூ ஊன்றுதல் போல் மிகவும் நிறு நடக்கவிடாது. வாய் உலரும், உடல் கனக்கும், இது அதிக வாதவஸ்துக்களைப் புசித்தலினால் பிறக்குது, சர்வாங்கத்திலும் காயமத்து, பின்பு கைகளில் அனுசரிக்கும், அப்போது கைகளை அசைத்திலும் நீட்டவும் மடக்கவும் கூடாமையாக இருக்கும்.

4 தூலஸ்தம்பம்

இது உள்ளங்கால் கனைத்து குடைச்சலென்னும் பாதையை உண்டாக்கும், தேகம் உலரும், மேல்மூச்சு உண்டாக்கும் தாகமெடுக்கும். தேகம் குளிர்ச்சி பெறும், இது கைப்பு, உப்பு, புளி முதலியவற்றை அதிகமாகப் புசித்தலினாலுண்டாகின்றது.

5 புசுவாதம்

இது மலதுவாரத்தில் அம்பு தைத்தது போல் குடைந்து நோயுண்டாக்கும். எண்ணாங் கால் அடியைப் பற்றி அதிக நோயுடன் குடைச்சலுண்டாக்கும். உக்கலையும் காலால் எறும்பூறியது போல் உணர்ச்சியுண்டாக்கும்.

6 கலாயகஞ்சம்.

இது, கால்களை நடை முதலியவைகளில் குடைந்து நடக்க வொட்டாமல் முடமாக்கி, கரகேட்டு, சடம் வெளுத்து இளைப்பும் பிரங்கேமுண்டாக்கும். இத்துணைத்தில் சிலேத்துமம் அதிகரித்து அதி-மயக்கம் முதலியவற்றை உண்டாக்கும். இது இதுகாலத்தில் குளிர்ச்சியான

பூமியால் சுற்றப்படுதல் சகல இடங்களிலும் இதுவா
ம் வியாபித்து உண்டாகின்றது.

7 உளை கெர்ப்பம்

இது, வாய்வானது உள்ளடங்கி அழுத்தநாடி இரண்
டையும் பற்றிக் கைகால் விரல் அற்றிக்கொத்து சாணை
ப்பாயது போல ஸ்பரிசம் உண்டாக்கித் தேகம் உளைந்து மி
டென் நடக்கொண்ணாது செய்யும் இந்நோகம் முற்றிலும்
அசைத்திடம்...

8 வாதகண்டகம்

இது, நடக்கும்போதும், உயரமாகத் தூணாவிடப்போது
ம், சலத்தில் இறங்கி நடக்கும்போதும், மயக்கமேற்றுத்
தள்ளாடி விழச் செய்யும். அப்போது தேகமெல்லாம் பா
ம்பு ஊர்வதும் ஏறுவது போல் உணர்ச்சிகண்டு தேகம் தூ
க்கிப்பெறும்.

9 கெத்திரவாதம்

இது, தேகத்தில் பாம்பு ஊரும் ஏறி இறங்குவது போல் தேகத்
திலுள்ள நரம்புகளில் வாயுவானது சேர்ந்து கொண்
டு சர்மத்தில் முள் தைத்தது போல் குத்தல், கடுத்தல், வே
தனை முதலியவற்றைப் பரப்பிக்கும்.

10 சந்திவாதம். Arthirtis

இது, முழங்கால்கள் வீங்கி இரத்தம் திரண்டு கொல்கி
டக்கவிடாமல், முழங்கால்கள் இடங்களில் தங்கிவிடு
ம், அவ்விடத்தில் நடுத்தல், மரத்தல், நோவு, வலிப்பது
ம், நோவுத் தீவிரம் முதலியவற்றை உண்டாக்கும்.

11. கம்பவாதம்

இது, சப்ததாதுக்களையும் சேர்த்து மேலால் தோலின்
மீதும் காதின் மீதும் பாம்பைப் போல ஊர்ந்து நோயு
ண்டாக்கும். கன்னம் கண் முதலிய இடங்களில் வலி
யாகவும் நீர்ப்பேதியாகவும், இரைச்சலோடு நுரைத்ததாக
வும், பிசுபிசுப்பாகவும், மஞ்சள் நிறமாகவும், இன்னும்
பலநிறமாகவும் பேதியாகும் அப்போது குமட்டல், நாக்கில்
மாவு படிதல், வாய் நாற்றம், வயிற்றிரைச்சல், வயிற்றுவலி
ச்சல், புளியேப்பம், விக்கல், மேல்மூச்சுகள் உண்டா
க்கும் இந்த அதிசார ரோகத்தை ஆரம்பத்தில் சரியானப
டி அஜீர்ணத்தைப் போக்குவதற்கு வழியுண்டுபண்ணி
ல் சாதாரணமாகக் கண்டாகிலே குணமாகும்.
வாந்தி பேதியும் இலேஷ்மபேதி எனக்கூறுவார்கள் அதைய
காலரா Cholera என்று கூறுவர். இது வாதக்காற்றின்
சம்பந்தத்தால் ஆமாசய விகற்பமுண்டாக்கி எனில்
நாடி இதை ரோகத்தைப் பரப்பும். இப்படி பரப்பப்படு
வர்களுடைய மலசலம், எச்சில், வாந்தி இவைகளின்று
வரும் மாமிசம் எங்கும் பரவி நீர்ப்பேதியானால் கிருமிக
ளையும் பரப்பும். அப்போது உண்டாகும் வாந்தியும் பேதியு
ம் ஒருவனுடைய அன்னம் வந்து கஞ்சிச்சலம் போலாகக்
கும் வயிற்றிலும் குடல்களிலும் வலிகண்டு போகும்
இதனால் உடம்பு மெலிந்து காது. ரக்கம் பாதகமாகும்
நாடியும் அவசமுண்டாகும் குன்றி இது அதிகமாய் விழுந்
டாகி தேகம், நாக்கு, முகம் இவைகள் வரண்டு விறைப்
போல் இருக்கும். விரல்கள் இழுத்து வாயும் பேசமுடியா
நிலைமையாகும் கண்கள் குழிவிழும் கைகால் தேகமும் வாடும்

கடுப்பு, இரைவு, இழுத்தல், எரிச்சல், இமிர், வயிற்று நோய், மலச்சிக்கல், என்றும் அறிகுறியை தோன்றமையாகப் பெற்றிருக்கும்.

11 பாக்குமேகம்

தசைவலி, ஆசனத்தில் பருத்திக் கொட்டை நெல்லு இவைகளைப் போல மேகக் கட்டிகள் தோன்றல், மலம் உருண்டை உருண்டையாக வேனும் அல்லது திரிதிரியாக வேனும் இரத்தத்துடன் வெளியாதல், ஆசனம் கடுத்தல், எரிச்சல், வியர்வை, ஆசனக்கடுப்பு, அற்ப பலவீனம் என்றும் அறிகுறியை தோன்றமையாகப் பெற்றிருக்கும்.

12 சிலேத்துமமேகம்

ஆசனத்தில் வெள்ளை நிற மாணமுளை, எந்நேரமும் இரைவு, எரிச்சல், கடுப்பு, சீழும் நீரும் கசிவு, கனத்த வலியுடன் மலம் இறங்கல், சிறுநீர் அதிக சூடாகப் போதல், சோபையும், தாது நட்டம், இரத்தக் குறைவாய் தேகம் வெளுத்தல் என்றும் அறிகுறியை தோன்றமையாகப் பெற்றிருக்கும்.

13 தொந்தமேகம்

ஆசனமானது கோழியின் மலாசயம் போல் வெளியே சுருங்கி விரிதல், நடை கெடல், வயிற்றுப் பசம், வருத்துறக் கடுத்து பேதியாகுதல், வியர்வை, தாகம் என்றும் அறிகுறியை தோன்றமையாகப் பெற்றிருக்கும்.

14 வினைமேகம்

அன்னருசியாமை, புளியேப்பம், அடிவயிற்றில் இழுத்தல், கோபம் மிகுதல், நரம்புகள் இசிவு, ஆசனத்தில் மிகுந்த வேதனை என்றும் அறிகுறியை தோன்றமையாகப் பெற்றிருக்கும்.

15 மேகமேகம்

ஆண்குறியால் வெள்ளை காணல், ஆசனத்தில் இரத்தம் சொரிதல், சுத்த நீரோடு மலங்கழிதல், நீர் எரிச்சல், தேகவலி, இருதிலிணிப்பு என்றும் அறிகுறியை தோன்றமையாகப் பெற்றிருக்கும்.

16 பவுத்திரமேகம்

ஆசனத்தில் கட்டிப் போல் தோன்றல், நீர் அடிக்கடி போதல், மலக்காலங்கள் கனத்தல், குதம் குய்யம் இவையாவும் கோழியின் தலைப் போல அதிக சூடாக இருத்தல், ஆசனத்தைச் சுற்றி மாம்பூவைப் போல மேகங்கள் தோன்றல், கோணவப்படும்

போல் இவற்றில் இருத்தல் என்னும் அறிகுறியை மேன்மையாகப் பெற்றிருக்கும்.

17 இரக்தமேகம்

ஆண்குறியால் புண்ணுதல், கைகால்களில் கடுப்பு, காலி ஆசனத்திற்குள் விரணமாகி கொட்டு கொட்டு யாக வெடித்தல், இரத்தமும் சலமும் கசிதல், அக்கினி போல் அனலுடன் எரிச்சல் மிகுதல், மலத்திச்சல், ஆசனம் வெடிப்புற்று வெளித்தோன்றல் என்னும் அறிகுறியை மேன்மையாகப் பெற்றிருக்கும்

18 துமேகம்

ஆசனமானது கொள்ளிக் கொடுத்துப் போல கிறுகிறுக்குதல், நீரும் ரத்தமும் சொரிதல் வயிறு பொருமல், கைகால் சந்துகளில் வீங்குதல், அடுக்கடு நாவறட்சி தாகம், இடுப்பு வலி, அதிக கோபம் என்னும் அறிகுறியை மேன்மையாகப் பெற்றிருக்கும்.

19 ஏருமேகம்

ஆசனத்தில் கடுப்புடன் எண்ணெய், சலம், போலக்கசிதலுடன் இன்னும் இளகும் உண்டாதல், தேகத்தில் இரத்த சொரி வேதனையை உண்டாதல், பசிக்கையால் சுகமின்மை, பணத்தில் கொப்பாக மேகம் வேறுபடல் என்னும் அறிகுறியை மேன்மையாகப் பெற்றிருக்கும்.

20 சுருக்குமேகம்

ஆசனத்தை அதிகமாக சுருக்கிக் கொண்டு பெருங்குடலில் வலியையுண்டாக்குதல், ஆசனத்தில் கடுப்பு, இரத்தமும் தண்ணீருமாக சொட்டுதல், தேககாங்கை, சரீரம் வெளுத்தல், அசைவின்மை என்னும் அறிகுறியை மேன்மையாகப் பெற்றிருக்கும்.

21 சவ்வுமேகம்

ஆசனத்தைச் சுற்றி சவ்வு போல் இரட்டையாகத் தோற்றுதல் நீரும் தண்ணீரும் கசிந்து கொண்டிருத்தல், வாயு அதிகரித்து போது அம்மேகம் விம்மல் என்னும் அறிகுறியை மேன்மையாகப் பெற்றிருக்கும்.

சாத்தியாசாத்தியம்

நீர்மேகம், தேன்மேகம், வாள்மேகம், இரத்தமேகம், வாதமேகம்,

பித்த மூலம், மேக மூலம், பவுத்திர மூலம், இரத்த மூலம், புழு மூலம், சுக்கில மூலம், சவ்வு மூலம், ஆகிய இவை பன்னிரண்டும் சாத்தியம். மற்றவை அசாத்தியமெனக் கூறப்பட்டிருக்கின்றன.

கவனிக்க

இந்நோயைத்தான் ஆங்கில வைத்தியர்கள் மூன்றாகப் பகுத்து எக்ஸ்டர்னல் பைல்ஸ். External Piles. அதாவது வெளி மூலமென்றும். இன்டர்னல் பைல்ஸ். Internal Piles அதாவது உள் மூலமென்றும். ப்ளீடிங் பைல்ஸ் Bleeding Piles அதாவது இரத்த மூலமென்றும் மூன்று வகையாகக் கூறுவர்.

இவைகளில் எக்ஸ்டர்னல் பைல்ஸ் என்னும் வெளி மூலமானது ஆசனத்தின் ஓரமாக இருக்கும் நாடி நாளங்கள் பெருத்து கட்டியாகவேனும் கிண்டமேடாகவேனும் வெளித்தோன்றுதலாம்.

இன்டர்னல் பைல்ஸ் என்னும் உள் மூலமானது மலவாயின் உட்புறத்திலுள்ள நாடி நாளங்கள் பெருத்து கிண்டமேடாக உள்ளடங்கியிருத்தலாம்.

ப்ளீடிங் பைல்ஸ் என்னும் ~~உள் மூலமானது~~ இரத்த மூலமானது மலமிறங்கும் போது உள் மூலமுளையிலிருந்து இரத்தம் பீறிடுதலாம்.

இங்கு சொல்லப்பட்டுள்ள மூன்று விதமான மூல நோயைத்தான் ஒவ்வொன்றையும் இரண்டு பிரிவாகக் கூறுவர். அதாவது மேகத்தின் பெருக்கத்தினால் ஏற்படுவதாலும் மலமிறங்கும் போது சங்கடமும் வேதனையும் இல்லாமலிருக்கின்ற நோ அதனை இன்டோலெண்ட் என்றும் எந்நோய்த்தில் எரிச்சல், குத்தல் நமைச்சல், அடைப்பு, வேதனை இவைகள் உண்டாகின்ற நோ அதனை இன்பளேமட் என்றும் கூறுவர்.

சயரோக பூர்வரூபம்

சயரோகமானது, பீனிசம், இருமல், வாய்நீரூறல், வாயாணிப்பு, மந்தாக்கினி, தேகம் இளைத்தல், அதிக போசனம், இன்பமான பொருள்களை வெறுத்தல், அன்ன பானாதிகளில் அசுத்தமா

னைப் பண்டம் எதுவோ இருப்பதைப் போல எண்ணல், அதி
ரஸ், வாந்தி, அரோசகம், போதுமென வாயுதிர்தலும்
உரப்பலம், கைகளைத் தூக்கிப் பிடியைப் பார்த்தல், முன்கால்
வீக்கம், கண்கள் வெளிறல், இரண்டு கைகளும் இழுத்தல்
துதை. தேகம் நோகுகை நோய் இழுக்கின்று தோன்றுதிக்கே
இடல், ஆரம்பத்தில் மாதர் மாமிசம் முதலிய பானங்களை
களில் இச்சை, கோழையால் அசங்கிதமின்மை, மேகம்
மறைய மெக்காட்டக் கொள்வதில் இச்சை, நகமும் மயிரும்
விளைவில் வளர்தல் ஆகிய இக்குணங்களோடு திரிதோ
ஷால் ஏழுன், பாம்பு, குரங்கு, நரி, நாய், பக்ஷி இவைகளினால்
ஏதோ ஒரு வேதனை உண்டானதாகவும், மயிர், எலும்பு, உமி,
சாம்பல் இவ்விதப் பொருள்களின் மேல் தான் ஏறினதாகவும்
நாட்டு தேசங்கள் பாழானதாகவும், நதிகளும் வற்றி
னதாகவும் ~~நாட்டு தேசங்கள்~~ நட்சத்திரங்கள் கீழே
விழுந்ததாகவும் கனவுகளைக் காணல் என்னும் இவைகளே நோய்க்குப்
பழைய ரூபமாகப் பெற்றுள்ளன.

இந்த சயரோகம் பன்னிரண்டு விதமாகக் கூறப்படுகின்
றது.

1 பிர்மசயம்

தேகம் இளைத்தல், இருமல், கண்கலங்கல், கோழையால் மிகு
தியால் இரைப்பு, ஸ்வாசகாசம், அரோசகம், வாந்தி, ஆகியக்
குணங்களை நிலைப்பெறச் செய்யும்.

2 சத்திரியசயம்

சுரம், பல வலி, நெஞ்சில் வலி, மிகுதியான மஞ்சள் கோழை,
தேக வலி, இருமல், வாந்தி ஆகிய குணங்களை நிலைப்பெற
ச் செய்யும்.

3 வைசியசயம்

கைகால் சோர்வு, வெயில் மிகுந்து போது வாயுதிர்தல், காய்
தல், இருமலால் கோழை விழுதல், தேகம் வெளுத்தல், அன்னத்
தை வெறுத்தல் ஆகிய குணங்களை நிலைப்பெறச் செய்யும்.

4 சூத்திரசயம்

கண்களில் நீர் ததும்பல், அடிக்கடி இருமல், மிடறு புண்ணாதல்,
தேகம் வெளிறல், காலை நேரத்தில் குளிர், மயிர்க்கூச்சம், மய

கல், தேகஉலர்ச்சல், காய்ந்துல், ஆகிய இக்குணங்களைத் திடப்
பெறச்செய்யும்.

5 வாதசயம்

நடுக்கல், காலசந்து பொருத்து கடுத்தல், வாந்தி, சுரம்
தாகம், தோள் கைகால் போன்ற இடங்களில் துடிப்பு, கழுத்து
மின்னி கொட்டல், அதிசாரம், இருமல், வெண்மை நிறமான
கோழை, தேகக்குளிர்ச்சி ஆகிய இக்குணங்களைத் திடப்பெ
றச்செய்யும்.

6 பித்தசயம்

காலையில் என்புகள் கடுத்துச் சுருங்கல் செம்புஇருமல்,
கோழை மஞ்சளாக வருதல், பித்தவாந்தி, மூர்ச்சை, குரல்
கம்மல், அசீரணம், தேகம் தோல் வெளுத்துப்பசுமஞ்ச
ளித்தல், சிறுநீர் மஞ்சள் வர்ணமாக இறங்குதல். ஆகி
ய இக்குணங்களைத் திடப்பெறச்செய்யும்.

7 சிலேத்துமசயம்

கோழையுடன் இருமல், வாந்தி, மூர்ச்சை, மந்தாக்கினி
பேதி, குரல்கம்மல், தேகவெளுப்பு, அசதி, நாசியில் நீர்
சொரிதல், சுரம், சுவாசத்தில் சொரி. ஆகிய இக்குணங்களை
திடப்பெறச்செய்யும்.

8 வாதபித்தசயம்

தேகமெலிவாகக் கடுத்தல், சுரம், தாகம், கோழையுடன்
வாந்தி, அசதி, இருமல், சுவாசம், தேகஎரிச்சல், மயக்
கம், வாய் கசத்தல், சிறுநீர் கடுத்திறங்கல் ஆகிய இக்
குணங்களைத் திடப்பெறச்செய்யும்.

9 வாதசிலேத்துமசயம்

தொண்டைகம்மல், தொனி பெருமல், சுரம், மேல்சுவா
சம், வாந்தி, இருமல், தேகமெங்கும் கடுத்தல், மஞ்சளா
ன கோழை துப்புதல், அப்பசம், அக்கினிமந்தம், அ
ரோசகம், தேகம் வெளுத்தல், கைகால்கள், கும்பல் ஆகிய
இக்குணங்களைத் திடப்பெறச்செய்யும்

10 பித்தசிலேத்துமசயம்

அதிகவிக்கினை, அசதி, சுரம், கோழையுடன் வாந்தி, இவசயம்

இரத்த வாந்தி, அதில் துர்நாற்றம், இருமல், பேதி, தூல சுற்றல், பாரமை, தாகம், உதிரத்தைப் போன்ற சிறுநீர்கள் ஆகிய இக்குணங்களை விளைப்பெறச் செய்யும்

11 விகாரச்சயம்

காதில் இரைச்சல், கண்கள் வெளுத்தல், தேகம் கட்டுவிட்டு மெலிவும் தளரல், தேகத்தில் வாரணம், மேல்மூச்சு, விலாபக்கத்தில் வலி, இரத்தத்துடன் வாந்தி, மூச்சு, வாய்நீரைவக~~ளை~~ளில் துர்நாற்றம் ஆகிய இக்குணங்களை விளைப்பெறச் செய்யும்.

12 தொந்தசயம்

தொனிபெருகும், சுரம், இருமலுடன், கோழை, ரத்தவாந்தி, மூக்கல், பேதி, துர்நாற்றம், மயக்கம், மேனோவால் கறுப்புநிற மாணவட்டம், தேகத்தில் கற்குறையு நாற்றம் ஆகிய இக்குணங்களை விளைபெறச் செய்யும்.

சாத்தியாசாத்தியம்

பித்த சயம், சத்திய சயம், வாதிய சயம், பந்த சயம், சிலேத்தும சயம் ஆகிய இவ்வைந்தும் சாத்தியம். மற்றவை அசாத்தியமென்று கூறுவர்.

கவனிக்க

இந்நோய்த்தை ஆங்கிலேய வைத்தியர்கள் கன்சம்ஷன் Consumption அதாவது தேகத்தை தின்னுக்கொண்டு போகிற வியாதியென்று கூறுவர். இவ்வியாதியுள்ளோர்க்கும் கெட்ட அணுநீல் கிருமிகள் என்னும் உயிரணுக்கள் உற்பத்தியாகி அவ்வாசப்பையான் கண்ணறைகளுக்குள்ளேயும், கண்ணறைகளினும், இதிய அவயவங்களிலும் அனேக இடங்களிலும் உண்டாகி தேகத்தை ரோகம் பரவுகின்றது. அந்த கிருமிகள் என்னும் அணுக்கள் நோயாளிகள் பெரிய தும்மல் இருமல் முதலியவைகளுடன் மனமும் இவ்விடம் சென்றபின் அக்கிருமிகளைச் சுற்றியிருக்கு மற்றவர் வாதனைப்பட்டு உண்டாகும் விதத்து வாகு அவ்விடங்களில் இதியாகும் அவ்விடத்திலுள்ள

இழுசுவாசக்குழல் இசிகளுக்கின்றெனன்று கபத்துடன் வெ-ளிப்படும். அப்போது சுவாசமும் சரிவர உள்வாங்கும்சக்-தியற்று இருக்கு உண்டாகும் பாதையால் சிறிது இரைப்-பு உண்டாகும். இது வேறுய இருமல் என்பர். இப்படி நாளுக்கு நாள் இரத்தின் பரபலமடைந்து அனாசீர-ல்களிகைப்பதுமன்றி பாராணதுவனக்குதிய தெறிஉ நடந்து விடாமல் செய்துவரும் அந்தசமயத்தில் இடு-மல், சுரம் விருதல், இரப்பலம், இளைப் போன்று கபம் விருதல், மாமிசபதார்த்தங்களின் மேல் வெறுப்பு, அ-ஜீரணம், தேவரநாது, கரம், கண்டசுவாசம், தேகஇளைப்-பு, வாயர்வை, பேதி, கொல்கம்மல், மேல்மார்பு, நோய் தேகஉஷ்ணம் தேயாமை யாவகள் உண்டாகும். இந் நோய்த்தொற்று ஆரம்பத்திலேயே இதனைகவிச்செய்து வதின் நன்மையைப்பயக்கும்.

காசநோய் வகைபேதம்

காசநோயானது, தேகம் உற்பத்தியாகையால் தொண்டை-யின் உட்புறத்தில் இன்றும், ஓட்டைச்சொர்கள் போல் ஹத்தி-யும், அநோய்த்தையும், அந்நோயைமாகச்சுருங்கிக் காரின்றுவரயு மேல் நோக்கி மார்பாற்றங்கண்டது-தில் இருமலும் உண்டாக்கிப் பண்ணார்ஜுரதின் நடும் புகளில் வாயாபத்து சுரிரமெல்லாம் நொக்கித்துமவ-த்து போல் அநிக வேதனையயும் தொல்கம்மலயுந் தாக்குப்பாதுய பேதாகப் பெற்றிருக்கின்றன.

1 மந்தாரகாசம்

நாசியால் மார்புச்சலம்வழுதல், இருமல், கபசேர்க்கை-யால் மேல்மூச்சு, பாம்பின் சீறல் போல இரைப்பான-யால் மேல்மூச்சு, தொண்டை, கண்டம், தொண்டை இவைகளில் காயர்த்தல், இவை வேறு தோன்று, தொல்கம்மல் என்றும் இக்கு-றிகளைக்கு உரிமையாகப் பெற்றிருக்கும்.

2 பட்சமந்தாரகாசம்

பாரிசுவாசப்பையாளும் இந்நோய் ஆரம்பத்து தோன்-றுமானால் தோன்றும் சுவாசப்படும். அப்போது இருமல் இட-மான தோன்றும் சுவாசப்படும். அப்போது இருமல், வயிற்று-ப்பு, சேர்ந்துயான் நெறியால் தொல்கம்மல், வயிற்று-ப்பு, பொருமல், நாசியால் நீர்வழுதல் என்றும் இக்கு-றிகளைக்கு உரிமையாகப் பெற்றிருக்கும்.

3 கபகாசம்

பாசைவிழுந்தால் இறுகிக்கட்டு நெருப்பனைய வெந்தகாரம், அ
பாரமானதுவலி, தேக உளைச்சல், வயிற்றுப்பசம்,
பேதி, கபம்பேச்சு, சளிக்கக்கட்டாது வாய்க்காரம் இருமு
தல் என்னும் இக்குணங்களைத் தனக்கு உரிமையா
கப் பெற்றிருக்கும்.

4 வாதகாசம்

நெஞ்சுவயிற்றினை, செவிகளிலாரைச்சல், அரோசகம்
நாசியின் துவாரங்களில் மாமிசம் வளர்ந்து அடை
ல் படபடத்து கீழ்ச்சேர்ந்து, கோழையுடன் இருமல் என்னு
ம் இக்குணங்களைத் தனக்கு உரிமையாகப் பெற்றிருக்கும்.

5 பித்தகாசம்

இருமல், புரட்டல், வாந்தி, இனிப்பேறவெய்து சுவை நாவி
ற் றேன்றல், தேகமெல்லாம் கடுப்பு, குரல்கம்மல், இரும
லால் இரத்தும் விழுதல், தேகம் கொதித்தல், அன்னத்வே
ஷம், புளியேப்பம், மயக்கம், சுரம் இத்துடன் பல
விகல் என்னும் இக்குணங்களைத் தனக்கு உரிமையாகப்
பெற்றிருக்கும்.

6 சுவாசகாசம்

அதிகமான கோழையுடன் இருமல், நாகப்பாம்பு சீறுவ
தைப் போல் சுவாசத்தின் சத்தம், தீராமின்மை, வயிற்றுப்
பசம், நாசியால் அனலையெறுட்சி, உடல் வற்றல், கு
ரல்கம்மல், உண்ணுகையில் வழுவழுப்பான கிருமிகள் எ
ன்னும் இக்குணங்களைத் தனக்கு உரிமையாகப் பெற்றி
ருக்கும்.

7 க்ஷத்தகாசம்

குரல்கம்மல், இருமலால் இரத்தம் கட்டுகட்டாக விழு
தல், விலாப்பக்கங்களில், வாயுவயிறுகொண்டு உளைச்
சல், நகங்களை வாய்ச்சல், இருகிறமஞ்சள் காணமும்
சிறுச் சளகரும் போதல், தேகம் வெளிறல் என்னும்
இக்குணங்களைத் தனக்கு உரிமையாகப் பெற்றிருக்கும்

8 சிலேத்துமகாசம்

இருமல், இளைப்பு, சுரம், மேல்மூச்சு, வயிற்று மந்தம், தே
கம் உருமாறல், சுரம், மயக்கம், தியக்கம், வாந்தி, இத்தீர்
குலங்கள், தேகக்கடுப்பு என்னும் இக்குணங்களைத் தனக்
கு உரிமையாகப் பெற்றிருக்கும்

9 பீநிசகாசம்

இருமல், கோழை மிகுதல், இளைப்பு, வயிறுப்பசம், ஆகா
ம் நித்திரையின்றி உடல் வருதல், மலசலம் கறுத்து வர்ணமா
கப் போதல் கோழையால் மீண்கவாசம் விகுதல், வயிற்றா
யடுத்து வளர்த்தல் என்னும் இக்குணங்களிருத்தலுக்கு உரி
மையாகப் பெற்றிருக்கும்

10 வாதபித்தகாசம்

காதுகளில் இரத்தம் வடிதல், கடுவாதைகள், இருமல்,
அசதி, வாதாதிக்கம், தேகம் புண்ட தொடைகள், மேல்மூ
ச்சு, மாரெட்டம், உடலூறுதல் என்னும் இக்குணங்களிருத்தலு
க்கு உரிமையாகப் பெற்றிருக்கும்

11 பித்தசிலேத்துமகாசம்

நெஞ்சில் நீறை, தேகவலி, இருமல், தொல்கம்பல், சட
கிடத்தல், மயக்கம், பீர்க்கம்பூவைப் போல தேகம் மஞ்
சளித்தல், மாரடைத்திருப்பு, என்னும் இக்குணங்களி
த்தலுக்கு உரிமையாகப் பெற்றிருக்கும்.

12 தொந்தகாசம்

குத்துக்குத்தியிருமல், இரத்தம் வடிதல், அனலேபோல் கொதிச்
சல், அசதி, பேதி, பாண்டுரோகத்தைப் போல் தேகம் வெ
ளுப்பு, படுக்கைக்கு இடங்கொடாமை, தேகக்கொப்பு என்னு
ம் இக்குணங்களிருத்தலுக்கு உரிமையாகப் பெற்றிருக்கும்

சாத்தியாசாத்தியம்

மந்தாரகாசம், பட்சமந்தாரகாசம், சுடர்காசம், பித்
தகாசம், சுவாசகாசம், இரத்தகாசம், பீநிசகாசம்,
ஆகிய இவை ஏழும் சாத்தியம். வாதகாசம், சிலேத்து
மகாசம், தொந்தகாசம் இவை மூன்றும் அசாத்திய
ம். வாதபித்தகாசம், பித்தசிலேத்துமகாசம் இவையிர
ண்டும் அசாத்திய வகையில் சேர்த்திருப்பினும் ஆரம்
பத்தில் தக்க சிகிச்சை செய்யின் சாத்தியமாமென்
று கூறப்பட்டிருக்கின்றன.

கவனிக்க

இந்நோய்க்கு ஆங்கிலேய மருத்துவர்கள் ஆஸ்த்
மா Asthma என்று கூறுவர். இது மஜ்ஜதாது என்னு
ம் ஸ்பஞ்சு தாம்புகளில் காணும். அப்போது சுவாசக்குழ

ந் இடங்களிலுள்ள சிறிய இடங்கள் சுருக்கமடையும். இ
ந்நோக்கம் பெரும்பாலும் இரத்தக்குழாய்களில் உ.3 மணி
க்கு அயர்ந்து நித்திரையால் திடீரென்று மூச்சு அடைப்
பாவது அல்லது மார்பில் பலமாகக் கண்டாவது ரோகி
யை எழுப்புவிக்கும். பின்னர் வரவர மூச்சு விடமுடியாமல்
கஷ்டப்படுத்தும். நெஞ்சியல் குர்குர் என்று இரைச்ச
லும் உண்டாக்கும். நாடி மெலிந்து நடக்கும். கண்
கள் ஒளியிழந்ததாக இருக்கும். சில வேளை ஆயாசத்தினால்
வியர்வை மிகும். முகம் வாடி கவலையுற்றிருக்கச் செய்
யும் இன்னும் சொல்லப்போனால் மரண அவஸ்தையால்
துடிப்பவரைப் போல் தோன்றுவிக்கும். ஆனால் தேகநிலை
த்திரம் செய்யாது. இப்படியெல்லாம் காட்டி சில நேரம்
சென்றபின் இருமல் ஏற்படுவதாகி இருமி இருமி கோழையை
வெளியாக்கி சுகநிலைக்கு கொண்டுவரும். இந்நோயத்தி
ன் அபாயம் இப்படி இருப்பதால் இந்நிலையை கொடியநி
லையால் இருக்கவொட்டாமல் உடனே ஏற்ற சிகிச்சை செ
ய்து அக்காலத்தில் உண்டாகிய உபத்திரவங்களை ஒழித்து
மேன்மேல் வராவொட்டாமல் செய்வது பண்டிதன் கடமை

உளமாந்த்ய ரோகபூர்வரூபம்

இது, இருதய ரோகத்தில் ஓர் பாகமாவதால், அநேகமாய் சின்
னங்களுடன் உட்புறத்தில் கட்டிகள் காணப்படுத்துடை
ந்து வாயால் வழி விழுவதை நிறுத்தப்படுவதே மா
கப் பெற்றிருக்கும். இதனை நான்கு விதமாகப் பாகுபடுத்திருக்கி
ன்றனர். அதன் விவரம் பின்வருமாறு.

1 வாத உளமாந்த்யம்

நெஞ்சியான் பழு வென்புகளின் பக்கம் வலித்தல், கிரைவ
றிதல், பெருத்த தொனியுடன் நோந்து இருமல், முறுவா
ண் சுரம், நெஞ்சியாங்கூடு உட்புறத்தில் கட்டிகள் உண்
டாகிப் பழுத்து உடைந்து வாயால் வழி விழுதல், இளைத்
மாதிக்கம், அன்னஞ் செரிக்காமல் வாந்தி, தாகம் அதி
னமும் இக்குணங்கள் உண்டாக்கும்.

2 பித்த உஷ்ணரோகம்

கீழ்வயிற்றில் தொண் கட்டியாகி விம்மிப் புண் போல் நோதல், தேகமெல்லாம் உளைச்சல், தலைவலி, சுரம், இமை மேல் நீர் வடிதல், களைப்பு, மிடறு புண்ணாக நோதல், மயக்கம், புரட்டல், என்னும் குணங்கள் உண்டாகும்.

3 சிலேத்தும உஷ்ணரோகம்

உடல் உருகி, தேகமெல்லாம் புண் போல் நோதல், வாயால் நீர் வடிதல், மனக்கிலேசம், வாந்தி, மயக்கம், இலேசு மாறுக்கம், நேக்கல், பஞ்சு போல் தேகம் வெளுத்தல் என்னும் குணங்கள் உண்டாகும்.

4 தொந்த உஷ்ணரோகம்

தலைவலி, சுரம், கிருமியுடன் சொறி, அன்னம் இறங்காமை, அசதி, உறக்கம், வாயால் துர்நாற்றத்துடன் நீர் வடிதல், சர்வாங்கத்திலும் நமைச்சல் என்னும் குணங்கள் உண்டாகும்.

சாத்தியாசாத்தியம்

சிலேத்தும உஷ்ணரோகம், வாத உஷ்ணரோகம் இவையாவும் கனத்த மருந்துகளினாலுங் கூட வசப்படா. பித்த உஷ்ணரோகம் பலவித சிகிச்சைகளினால் வசப்படும். ஆனால் தொந்த உஷ்ணரோகமோ அசாத்திய சாத்தியமெனக் கூறுகின்றனர்.

1 வாதப் பெரும்பாடு

தலைவலி, தேகத்தில் இடுப்பு பிளவுகளில் குடைச்சல், சரீரமெங்கும் வலித்தல், மாதவிடாய் வந்தபோது கருப்பாணியைப் போல் வயிறு விம்மல், உளைச்சல், மார்மல் தானத்தில் கொம்மை மிகுதியாகவும் துக்கமாகவும் சைத்தி சைத்திடுல் என்னும் குறிகளுண்டாகும்.

2 பித்தப் பெரும்பாடு

அன்னஞ் செல்லவொட்டாது, மாதவிடாய் வந்தபோது அடிக்கடி நின்று மஞ்சள் நிறமான நீர் பெருகல்

சமயம் துடைபட்டு கட்டு கட்டியாக விழுதல், மர்மஸ்தானத்தில் அரிப்பு, தேகம் வெளுத்தல், இளைத்தல், கால்களில் சோர்வடைதல், சிரம் கொத்துதல் என்னும் இக்குறிகள் ஏற்படும்.

3 வெளுத்த பெரும்பாடு

மாதவிடாய் வரும்போது வெள்ளை நிறமாகத் தோன்றுதல், அதனின்று துர்க்கந்தம் வீசுதல், தேகம் வெளுப்போடு காய்தல், சர்மம் வறட்சியைக் கொண்டு சோம்பலுத்தல், இடுப்பில் அடிக்கடி குத்தல் மயக்கம் என்னும் இக்குறிகள் ஏற்படும்.

4 தொந்தப் பெரும்பாடு

மாதவிடாய் வரும்போது சிவப்பாகவும், கருப்பாகவும் உதிரம் வெளிகாணல், அதனில் துடைபட்டு உறைந்து கறுத்து கட்டி கட்டியாக விழுதல், துர்க்கந்தம் வீசல், வயிற்றுளைச்சல், தலைநோக்கம், வாய்நீரூறல் என்னும் இக்குறிகள் ஏற்படும்

சாத்தியா சாத்தியம்

வாதப் பெரும்பாடு, பித்தப் பெரும்பாடு, இவை யாவும் சாத்தியம். வெளுத்த பெரும்பாடு, தொந்தப் பெரும்பாடு இவைகளிரண்டும் அசாத்திய மென்று கூறப்படும்.

கவனிக்க

இந்த ரோகத்தை ஆங்கில வைத்தியர்கள் இத்துரத்தப்படு ஸ்திரீகளின் கர்ப்பப்பையிலிருந்து மாதமாதம் வெளிப்படுகிற இரத்தத்திற்கு ஹமோனஜீ மென்னல் Flow of menses என்பர். இது சரீரத்திலுள்ள இரத்தமானது கர்ப்பைக்கும் கீழ்ப்பக்கும் சென்று போகுத்து மாதத்திற்கு ஒருமுறை அளவுக்கு மேற்பட்டு வெளியாகின்றதாம். இது கர்ப்பம் தரித்த போது கருச்சிதைவுக்காகவும், பாசாத்து பண்ணாங் குழந்தையால் கருச்சிதைவுக்காகவோ வாக மாறுதல் அடையும். அக்காரணத்தால் இட்டே

அச்சமயங்களில் இந்த மாதவிலக்கம் காணப்படும்
அங்ஙனம் கருப்பமில்லாது ஸ்திரிகளுக்கு மாதாந்த
ம் வருங்காலத்தில் விடாய். உஷ்ணமான அன்னபா
னாதிகள் உட்கொள்ளுவதாலும். இவ்விஷயத்தை மறை
யாகக் கொள்ளுவதாலும், தேகக்குளிர்க்காய்ச்
சல் மண்ணீரல், வியாதி, வெட்டை மூலம் போன்ற ரோகங்
களினாலும், கருப்பைக்கு அடுத்த நாடிகளின் பெலம்
குன்றும் மிகுதியான ரத்தம் வெளியாகும்.
இதுவன்றி கிரமம் தப்பி இருத்தல், அத்துடன்
காணப்படும்.

1 வாதகல்லடைப்பு

நோயாளின் கீழ்க்குக் கொண்டிருத்தல், மலசலக்குறைக்கம்,
ஆண்குறியால் வலி, பற்கள் கடித்தல், அட்டைப் புரட்டல்
வயிறு புடைக்கும். இதில் மாமிசத் துண்டு போல் தோன்றும்
நன்றாக் கொஞ்சம் வெளிப்படும்.

2 பித்தகல்லடைப்பு

நீரடைத்து அகோரம். இரும்பு இளக்கக் காய்ச்சி
த் தெளிவது போல வருத்துதல், உடல் நிறமாண
கற்கள் உண்டாகி நீர்த்தாரையால் சிக்கல், அப்போது தா
ங்கொட்டைப் பழம் கக்கும் வாதுபோல் நன்றாக் கொஞ்சு
வெளிப்படும்.

3 சிலேத்தும கல்லடைப்பு

தொப்புளின் கீழால் வில்லைப் போல் விழுந்து வாத்துத்
தைக்கால் சந்து இடுப்பு இவைகளில் குடைச்சலுடன்
இருகாலால், ஆண்குறியான் மேலால் கடுத்து வலிய
ருத்தல், வெள்ளை நிறமான சிறு கற்கள் நீரோடு
நங்கல் நன்றாக் கொஞ்சு வெளிப்படும்.

4 தொந்தக்கல்லடைப்பு

நீர்த்தாரையான் புயால் அதிக வலியும் வருத்து
தலும் உண்டாக்கும். அதிக காஞ்சத்துடன் நீர் நீங்கும்.

கல். அதில் இருமலைக் கண்டபோது தோன்றும், இரை-
ஒன்றுக்கு இரண்டாக யானைக் கால் வீங்கிப் பெருத்த-
கொங்கையும் பெண்ணும்.

சாத்தியாசாத்தியம்

வாதக்கல்லடைப்பு. பித்தக்கல்லடைப்பு, சிலேத்தும
கல்லடைப்பு இம்மூன்றும் தக்க அவிழ்தங்களினால்
நிவர்த்தி செய்யப்படும். தொந்தக்கல்லடைப்பு அசா-
த்தியமாம்.

கவனிக்க

இந்த ரோகத்தை ஆங்கில வைத்தியர்கள் மூன்றாகப் பகுத்து-
ப்படுகிறார்கள். Gravel அணுத்துவமான மணல்கள்
கால்சியம் Calculus. கண்ணுக்குப் புலப்படும்படியா-
ன மணல்கள். பெரிய Stone பெரும் கற்கள் ஆகிய
இவைகளால் உண்டான நீரடைப்பு ரோகமென்பர். இ-
து நீரில் இவைகள் உண்டாகும் போது இடுப்பில் மிகுந்-
த வேதனையை உண்டாக்கும். இம்மணல்கள் அணுத்-
துவமாக இடுப்பின் மூத்திரக் குழாய்க்குள் வந்து
அதன் வழியாக கீழ் இறங்கி மூத்திரப்பை-
யால் வந்து விழுந்துவிடும். அப்போது குத்திக்கக்கூடா-
த வேதனையை உண்டாக்கும். அப்போது படுத்-
தாலும் சொல்லமுடியாது. இடுப்பு வைத்துவலியா-
னது அதுவாது மூத்திரப்பைக் கீழ் நோக்கி
பீஜத்திற்கும் தொடைகளுக்கும் இறங்கும். அச்சம-
யம் பீஜங்கள் மேலுக்கிழுத்தல், மூத்திரத்தில் இரத்தம்
கலந்திருத்தல், வாந்தி இல்லாட்டு குளிர்தல் ஆகிய
இக்குணங்கள் உண்டாகும். இம்மணல்கள் மூத்திரப்
பையால் இறங்கிவிட்டால் உடனே வேதனை தணியும்
அது அணுத்துவமாக இடுப்பின் இருகிறோமோனி-
யில் வெளிப்படும். பெரியதாக இருந்தால் மேலும்
அதுவாந்தின் பின்புறம் போது மூத்திரப்பையால்

எரிச்சல் அடிக்கடி சிறுநீர் வருவதைப் போலக் காட்டி நீரிறங்கும் போது அடைத்துக் கொள்ளலன்றும் துர்க்குணங்களை யெல்லாம் விளைவிக்கும்.

1 வாதகிரிச்சரம்

மேகமானது பற்றிய போது நீர்வயாற்றால் தாமசம் சிக்கிமறுப்பட்ட சுக்கிலத்தால் சரீரமடைந்து கரும் பற்றி நீண்டதால் வேதனையுண்டாக்கும் அடிக்கடி சிறுநீர் சொட்டுச் சொட்டாக இறங்கும்

2 பித்தகிரிச்சரம்

காரங்கள் அதிக, சூடும் மீறும் வாய்க்கும் இவைகளால் நூல் வந்தநிக்கத்தால் வயிற்றுப்பசுமஞ்சளாகி சிறுநீர் துவாரத்தில் எரிச்சலையும் வேதனையும் உண்டாக்கி மஞ்சள் இரத்த வர்ணமாக நீரிறங்கச் செய்யும்

3 சிலேத்தும கிரிச்சரம்

ஆண்குறிவாயத்து வீங்கும், தேகம் வெளுக்கும், அசதியுடன் அடிக்கடி வழுவழுத்து கட்டுண்ட நீரை வெளிப்படச் செய்யும்

4 மேககிரிச்சரம்

சூடும் இய்யம் இவைகளில் அதிகக்கொண்டு அடிக்கடி நீர்க்கழிவுடைய வெள்ளை விழும், நிறுத்திய பண்டம் வெச்சத்தைப் போல இருந்து வெளிப்படும். அது வயிற்றில் புண்கள் உண்டாவதைப் போல உணர்ச்சியுண்டாகும் ஆண்குறியாம் மேல் போது உடலைவிறுத்துவிக்கும்.

சாத்தியாசாத்தியம்

மேககிரிச்சரம், பித்தகிரிச்சரம், இவையாரண்டும் சாத்தியம் வாதகிரிச்சரம் சிலேத்தும கிரிச்சரம் இவையாரண்டும் அசாத்தியமென்பர்.

கவனிக்க

இந்நோயை ஆங்கிலேய வைத்தியர்கள் நீர்த்தடைப் படுதலென்று அழைப்பர். Retention of Urine என்பர் இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு; அதாவது நீர்த்தாரையான் செல்வதாக அடைபடும் நீர்தாரையால்

சர்மாமிசம் வளர்ச்சியாலும் உண்டாகின்றன. இந்த ரோகம் பாமேகம் கண்டவர்களுக்கே கொடுமையாகக் காணகின்றன. அப்போது அடிக்கடி மூக்கல், நீர் இறங்காமல் இருத்தல், சுத்திரப்பை கனத்தல், அடிவயிற்றில் உருண்டையாக கட்டிப் போல் தோற்றல். நீர்தாரையால் அடைக்கும். நீர்விடும் போது துளித்துளியாக இறங்கல், ரத்தம், படபடத்து சீழ், தேககாங்கை முதலிய குணங்கள் உண்டாகும். இதற்கு உடனே கனத்த அவிழ்தங்களைக் கொடுத்து நீரை வெளிப்படுத்த வேண்டும். காலதாமதமானால் சுத்திரப்பையைத் வெடித்து வயிற்றுக்குள் நீர் இறங்கி விடும்

1 மருந்தீடுமேகம்

இது, மருந்தீட்டினால் சரீரம் இளைத்தல், இளைப்பு, அன்ன துவேஷம், தேகமெலிவு, அடிக்கடி பயப்படுதல், பரபரத்தல், வாந்தி இருமல், மயக்கம், வாயானது புளிப்பாகும் வீசல், சோர்வுறுத்தல், புத்தியொன்றிலேயே சொல்லல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

2 கஞ்சாமேகம்

இது, கஞ்சா அபினி முதலியவற்றைப் புகைப்பதால் உடல் வற்றல், சர்மத்தின் தேஜஸ் கெடல், அடிக்கடி இருமல், பாரித்தல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

3 மதுமேகம்

இது, மதுபானம் செய்வதால் நெஞ்சு உலர்தல், கண்டம் வறட்சல், தேகத்தில் நீர்வு, அடிக்கடி இருமல், சோபையால் வீராணம் ஏறல் கண் வீங்கி வெதும்பல், சிரசில் தாக்கி பாரித்தல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

4 அரமேகம்

இது, அரமானது தேகத்தில் தாக்கி நெருநெரகைச் சுகப்படாமலேப்போனால் தேகமானது வற்றி கனத்து இருமல் அதிக சுவாசம், தேகம் வெளுத்தல், கண்களின் நேரம் புகளில் பச்சை வர்ணம் தோற்றல், சர்மம் கருக்கமடைதல் ஆகிய குணங்கள் உண்டாகும்

5 இரத்தமேகம்

இது, போர்க்களத்தில் யுத்தம் செய்யும்போது அடிபட்டு உதிரம் சாய்வதாலிருந்தது போது மனதில் இதிப்பட்டு ஆமாசயம் இருதயம் செயல்கெட்டு மோசஞ்செய்யும் அப்போது வருட்டியோவினால், உடலெல்லாம் தீக்கொண்டெரித்தாற் போல இக்குணங்களுண்டாகும்.

சாத்தியா சாத்தியம்

மருந்தினால், மதுவினால், சுரவினால் இவைமூன்றும் வசப்படும். கஞ்சாவினால், இரத்தவினால் இவையாவும் அசாத்தியமென்று கூறியிருக்கின்றனர்.

விப்புருதிரோக பூர்வரூபம்

விப்புருதி கட்டியானது முதல் முதல் தோல் ரத்தம் மாமிசம் மேதஸ், எலும்பு, சன்ன நரம்பு, கன நரம்பு, இவைகளில் கொஞ்சங் கொஞ்சமாய் சேர்ந்து முடிவில் துடித்து திடபெற்று வளரும் புடைத்து விக்கத்தையே துணக்கப்படும் ரூபமாகப் பெற்றிருக்கின்றன.

இது நாபிக்கு மேல் உட்புறத்தில் காணும் கட்டியாக இருந்தால், பழுத்து உடைந்து அந்த சீழ் ரத்தம் இவைத்துண்ணீர் முதலியவைகள் வாய் வழியாக வந்துவிடும்.

நாபிக்குக் கீழ் உட்புறத்தில் காணும் கட்டியாக இருந்து பழுத்து உடைந்து அந்த சீழ் ரத்தம் இவைத்துண்ணீர் முதலியவைகள் ~~வாய் வழியாக வந்து~~ ஆசனத்தின் வழியாக வெளியாகும். இந்நோய்க்கு லேசாத்திய லட்சணம். இந்த ரோகத்தை ஆறுவகையாகப் பிரித்திருக்கின்றனர் ஆயுர்வேதம்.

1 கப விப்புருதி

வயிறு பொருமல், சீழ் வயிறு புண்ணாக நோதல், உடல் வறள் உதிரம் உறைந்து சீழ் வயிற்றில் புடைத்தல், கர்ப்பம் போல் வயிற்றில் வளர்தல், மலம் தீய்ந்து ஆட்டுப்புழுக்கை போல் வெளியாதல், தலைவலி என்னும் இத்யாதி குணங்களைப் பெற்றிருக்கும்.

௨ வாதவிப்புருதி

இடுப்பு, முன்னந்தொடை, விலா, நெஞ்சு இவைகளில் நோக்கிச் சுரம் காய்தல் கொடிய ஏக்கத்தினால் இருமல், அடிவயிற்றில் நோயுண்டாகி கொடிய வலியாக உதிரம் சாய்தல், சரியாக நித்திரை வராமல் செய்தல் என்னும் இத்யாதி குணங்களைப் பெற்றிருக்கும்.

3 பித்தவிப்புருதி

தேகம் நெருப்புப் போல் கொதித்தல், தினவோடு சிரங்கள் விரைவில் பழுத்துடைந்து உடைதல், அப்போது நீர்கள் சிந்துதல், தாகம், வயிற்று உப்புசம், ரத்தவாந்தி, என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்

4 சந்துவிப்புருதி

வயிற்றின் பக்கத்தில் புற்றுப் போல் திரண்டெழும்புதல், உடைந்து சீழ் கசிதல், தேகமெங்கும் தோல் வெடிக்கிறண்டாகுதல், மாரடைப்பு, மயக்கம், உடல் துளைச்சி என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

5 ஐயவிப்புருதி

இரத்தம் ஒரிடத்திலேயே கட்டுதல், அவ்விடத்தில் எண்பார் பற்றுதல், விரணமாகி வெளிக்கொணரல், தேகமெல்லாம் நெருக்கித்துளைத்ததுப் போல் வலித்தல், தேகம் இளைத்து வெளுத்தல், தேகத்தில் எறும்பு ஊறுவதுப் போன்ற உணர்ச்சி என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

6 வாதுவிப்புருதி

அ. ரவால் வீக்கம், வாய் கசத்தல், தேகவலி, பாரமை, உடல் வேதனை, இத்துக் கொடிப்பால் தேகக்கட்டு, வாய்நாற்றம், தாகம் என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்

7 இரெத்தவிப்புருதி

வாய்கிளிப் போல் பேசுதல், உடல் வீக்கம், அரோசகம், சுரம், மஞ்சள் பச்சை வர்ணமாய்ப் போதல், உடல் வெளுத்து ப்பலங்குறைதல் என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

சாத்தியாசாத்தியம்

கபவிப்புருதி, வெகுவிப்புருதி, பித்தவிப்புருதி, ஐயவிப்புருதி இவை நான்கும் கஷ்டத்துடன் குணமாக்கப்படும். வாதுவிப்புருதி, இரெத்தவிப்புருதி இவை யாவும் அசாத்தியமெனக் கூறுவர்

கவனிக்க

இந்நோய்களை ஆங்கில மருத்துவர்கள் சீழ்க்கட்டு ஆப்ஸெஸ் Abscess என்பர். இதில் இரண்டு வகையுண்டு. முதலாவது அக்யூட் ஆப்ஸெஸ். Acute abscess இவ்வகைவிப்புருதி விரைவில் சீழ்கொண்டு உடையும். க்ரானிக் ஆப்ஸெஸ் — Chronic abscess சாந்துவிப்புருதி இது மெதுவாக நீண்டநாட்களில் சேர்ந்து உடைவதும், ஆறுவதும் நிதானமாக இருக்கும்

நீர்வார்ப்புகளும் போது கரம் காளும் கீழ் கொண்ட பாகு சேர்ந்துப்படும். அப்போது அந்த இடம் அதிக பருவாகவும் வீங்கி போலவும் தோற்றும். கட்டு மெதுவாகி சிவந்து திரளாக வேறுதுவாடையும். பின்னர் முகம் வடிந்து உடையும். இந்த கட்டு தேகத்தின் உள் வெளி எல்லாப்பாகங்களிலும் காணக்கூடியதாயாகும். ஈறுகள், தொடை, உள்ளங்கை, உள்ளங்கால் முதலிய இடுக்குகளில் காணுமேயானால் புரை கொண்டுபோதவும், சீழ் காணுது வேதனையும் கரமும் பரவமாகும். இக்கட்டுகளில் அவிடத்திலுள்ள எலும்புகளும் கெட்டு அசுத்தியமாக ஏற்படுவதுமுண்டு. இந்த ரோகத்திற்கு மேல் கட்டு உண்டாவதற்கு முன்னரே நோய் அவிழ்க்கக் கொடுத்து வெளிக்கிளம்பவிடாமல் அடக்கி உடனே அதற்கு காரணமாகிய கிருமிக் கொடுத்து இவைத்திருக்கவேண்டும். ஒருகால் மீறிவந்து பழுத்து உடைந்தால் உள்ளுக்கு மருந்து கொடுத்து மேலுக்கு ரணசிகிச்சை செய்து இவர்த்திருக்கவேண்டும்.

1 கரப்பான் ரோகம்

வாதக் கரப்பான்

தேகம் உஷ்ணமாதல், தொடைச்சுவோடு தோதல், விரல்களின் சந்துகளில் வெடித்துப் புண்ணாதல், தேகமெலிதல் என்னும் இக்குணங்களையுடைத்தாயிருக்கும்.

2 ஐயவாதக் கரப்பான்

உட்கார்ந்தெழும்போது கைகால் கடுப்பு சந்து இவைகளில் இசிவுண்டாதல், ஆங்காங்கே வெடித்துப் புண்ணாதல், தேக உளைச்சல், அரிப்பு, தாகம் என்னும் இக்குணங்களையுடைத்தாயிருக்கும்.

3 கண்டக் கரப்பான்

இரத்தக் கடுப்பு, புகைந்து மண்டை தலையை வலித்து நோதல், குளிரல், நடுக்குதல், தேகத்தில் சொறி, மயக்கச்சுரம், திக்கிடல், கண்கூசல், கண்டத்தில் முள்ளைச் செருகியதைப் போல கரகரத்தல் என்னும் இக்குணங்களையுடைத்தாயிருக்கும்.

4 வறட்சிக் கரப்பான்

தேகம் வீங்கல், தடித்தல், அரித்தல், இவை வெடித்து சொறிந்து புண்ணாதல் அதில் புலால் நாற்றம் வீசல், வாய் பதற்றல் என்னும்

இக்குணங்களுடைத்தாயிருக்கும்

5 கபாலகரப்பான்

தேகத்தில் தினவு, கண்களில் உளைதல், கண்டத்தில் கரகரப்பு, கண்களில் நீர் சொரிவதுடன் பீளை கட்டுதல், நாசியில் நீர் வடிதல் இரவில் நமைச்சல், தும்மல், நெற்றி துடிப்பு. அண்ணாக்கிலெழுச்சி என்னும் இக்குணங்களுடைத்தாயிருக்கும்

6 பித்தக்கரப்பான்

தேகக்காங்கை, மயக்கம், சோர்தல், தேகத்தில் சொறியோடு மஞ்சளித்தல், அன்னத்துவேஷம், பேதியாவதைப் போன்ற உணர்ச்சி என்னும் இக்குணங்களுடைத்தாயிருக்கும்

7 சிலேத்தும கரப்பான்

தேகம் வெளுத்ததுடன் விரணம், குரல் கம்மல், அதிக பேச்சு, ஈளை, இருமல், மேல்மூச்சு, காதிரைச்சல், என்னும் இக்குணங்களுடைத்தாயிருக்கும்.

சாத்தியாசாத்தியம்

வாதகரப்பான், பித்தகரப்பான், வறட்சிகரப்பான், கபாலகரப்பான், இவை நான்கும் அவிழ்தங்களினால் வசப்படும். நீர்வாதக் கரப்பான், கண்டக்கரப்பான், சிலேத்தும கரப்பான் இவை மூன்றும் அசாத்தியமெனக் கூறப்பட்டிருக்கின்றன.

கவனிக்க

இந்நோய்க்கு ஆங்கிலேய மருத்துவர்கள் சித்தரித்திருப்பது எரப்ஷன் ஆப்-தி-ஸ்கின் Eruption of the Skin என்பர். இது இரத்தம் கெட்டு இருவிதமாக வந்தபடியா இருக்குமிடத்தில் பருக்கும் அதனைப் பலவிதங்களாகக் கூறுவர் அதாவது.

ஸ்கால்ட் ஹெட் Scald-Head கபால கரப்பான். இது மண்டையிலுண்டாகும் விரணம் அவ்விரணங்களிலுண்டாகும் சீழ்த்தண்ணீர் உலர்ந்து வெடித்து சிறு கீறல்களாகப் பக்குகள் விழும் இதற்கு ஒன்றும் பரிகாரம் செய்யாவிடின் இந்நோய் கஷ்டசாத்தியமாம்.

ங்களென் Scabies சொறி Psora இட்ச் Itch என்னும்
பெயரான சிரங்குகள் நமைச்சல் மிகுதியாகிய வியாதிக்கு
ப் பேன்கள் தெரியும்படி தானாகும் அப்படிச் செய்
யத் தூண்டப்பட்டால் தோன்றி வாராமல் போகும். புரு
ரைகோ Prurigo நமைச்சிரங்கு. இதுவும் வியாதி
க்குக்குள் போல் காணப்படும். அதிக நமைச்சல் எடுக்
கும். இதற்கும் மேற்கூறியவகையால் தெரியும்படி செய்
யும் அப்படி இதற்கு வெளிக்காணிலும் ரோகிக்குத் தெ
ரியாது.

படர்தாமரை Ringworm நெருப்பிரிசு Herpes என்
னும் பெயரான படர்தாமரையானது தேகத்தில் பல
இடங்களைக் கிளர்ந்து நமைச்சல் எடுக்கும் நமைச்சல்
வியாதிக்குக்குள் போலத் தோற்றத்தினை வைக்கும். நா
ளுக்கு நாள் படரும். இவைகட்கு அடியிற் கூறப்பட்
டிரா மேல்பூச்சு மருந்துகளினாலும் இதற்கு அக்கினி
ககைக் கூறப்பட்டுள்ள அவிழ்தங்களினாலும் சிகி
ச்சிக்க வேண்டும்

1 அஜீர்ண சுத்தி

இது, நாபித் தானத்தில் சமானன் என்னும் வாயுவா
னது மீறியிருப்பு, முதுகெலும்பு இடங்களில் பரவி நின்று
கருணமான ஆகாரத்தை ஜீரணிக்க வொட்டாமல் மேல்
நோக்கச் செய்யும்

2 வாத சுத்தி

இது, இருதயஸ்தானத்தில் பிராணவாயுவானது நின்று
துணைப் பெருக்குமில்லாது ஆகாரத்தை வெளித்தள்ளு
அது கறுப்பாகவும் வெளுப்பாகவும் தோன்றுதலுடன்
தேகத்தில் துடிப்பு, நெஞ்சடைப்பு, இருமல், காசம்
இரைப்பு, ஆகியவைகளையும் உண்டாக்கும்

3 பித்த சுத்தி

இது, மஞ்சள் நிறமாகவும், வெம்பான நெய் வாசனை
யொத்ததாகவும் வாந்தி செய்விக்கும், இன்னும் புகை
ச்சலெடுக்குமல், நாக்கால் உருசியின்மை, எரிச்சல், தாகப்

புக்கிருந்தால் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

4 சிலேத்தும சத்தி

இது, இருமல், குளிர், இளைப்பு, முதலியவற்றோடு வாந்தியையும் அதில் இனிப்புச் சுவையையும் அறிவிக்கும்.

5 தொந்த சத்தி

இது, வாந்தியால் மாமிசம் இரத்தம் முதலியவற்றின் கவிச்சு நாற்றத்தையும், தேகக் கொடைச்சல், நாவறட்சி சுரம், உடல் இளைப்பு, முதலியவற்றையும் பெற்றிருக்கச் செய்யும்.

சாத்தியா சாத்தியம்

அஜீரண சத்தி, வாத சத்தி, பித்த சத்தி, இவை மூன்றும் சாத்தியமாம். சிலேத்தும சத்தி, தொந்த சத்தி இவையாவும் அசாத்திய மெனக் கூறப்பட்டிருக்கின்றன.

கவனிக்க

இந்நோயத்தை ஆங்கிலேய மருத்துவர்கள் இத்தூரத்துப்படி வாமிட்டிங் vomiting வமன ரோகமென்பர். இது தனி ரோகமன்று; இரைப்பையானது தொழிலில் மந்தப்பட்டதினால் வருவது, சுரம், மேக அஜீர்ணம், அசதி, சந்நிமுதலிய ரோகங்களில் வெளிப்பட்டாவது காணும். இன்னும் கர்ப்பஸ்திரீகளுக்கு ஆரம்பத்தில் அபாயமாகக் காண்பதுண்டு. அக்காரணங்களை அறிந்து பரிகாரம் செய்து நிவர்த்திக்க வேண்டும்.

விக்கல் ரோக பேதம்

இதனை வாத விக்கல், பித்த விக்கல், சிலேத்தும விக்கல், தொந்த விக்கல், என நான்கு விதமாகக் கூறுவர். இது நாபியினின்று வாயுவானது அதிகரித்துச் செய்யும் தொழிலென்பர்

1 வாத விக்கல்

இது, வாயு அதிகரித்தலினால் நெஞ்சு குழியினிடமிருந்து விக்கல் இளைப்பும் அக்காலத்தில் கண்கள் துடித்தல், நாவில் துவர்ப்பான சுவை முதலியவைகள் உண்டாகும்.

2 பித்த விக்கல்

இது, பித்தம் அதிகரித்தலினால் உண்டாகும் அப்போது கண்

தேகம் இவைகளில் வெதுப்பு, கொட்டாவி, படபடத்த நாடி, அதிக திருஷை, கோபம் முதலியனவைகள் உண்டாகும்

3 சிலேத்தும விக்கல்

இது, சிலேத்துமம் அதிகரித்ததால் உண்டாகும் அப்போது நெஞ்சில் கோழை கட்டி, தேகம் வெளுத்தல், ~~அதிக~~ கடுத்தல், சுவைச் சிக்கம் முதலியனவைகள் உண்டாகும்

4 தொந்த விக்கல்

இது, முற்கூறப்பட்ட வாத பித்த சிலேத்தும விக்கல்களின் இன்னல்களுடன் அது சேராயமின்று தேகமெல்லாம் அதிரும்படி அடிக்கடிக்காய் ஆழ்ந்த விக்கல் உண்டாக்கும்.

சாத்தியாசாத்தியம்

வாதவிக்கல், பித்த விக்கல், இவையாதனும் சாத்தியப்படும் சிலேத்தும விக்கல் ஆரம்பத்திலேயே தக்க சிகிச்சை செய்யின் குணப்படும். தொந்த விக்கல் அவிழ்தங்களுக்கு வசப்படாமல் உடனே மரணத்தையுண்டாக்கும் என்று கூறுவர்.

கவனிக்க

இந்நோய்க்கு ஆங்கிலேய மருத்துவர்கள் இக்கப். Hiccup என்று கூறுவர். இது மார்புக்குள் விதானம் என்று சொல்லப்படுவன ஈரல் தாங்கிக்கும் அன்னாசயத்திற்கும் காண்கிறது. இது அதிர்ச்சியுடன் விட்டு விட்டுக் காட்டும். இன்னும் விதானத்தில் வெப்பம் கண்டாலும் அல்லது விதானத்தை மேலுறுப்பாவது கீழுறுப்பாவது நெருக்கினாலும் விக்கல் உண்டாகும் பாரோக்கிய காலத்தில் உள்ளுறுப்புகள் விகல்பமடைந்து விக்கல் காணப்பெறின் அசாத்தியம். சிந்த விக்கல் சிலசமயம் திப்பிலி என்று அடுக்கு அன்னபானாதிகளினால் காணும். இது உடனே நிவர்த்தியாகும். பயமில்லை மிக்க உஷ்ணமும் ஒரு நோய்க்குடன் சம்பந்தப்பட்டவை

நின்கொவதாமதஞ் செய்யாமல் சிகிச்சை செய்து நிவர்த்திக்கவேண்டும்.

பவுத்திரரோகபேதம்

இது, ஆசனப்பவுத்திரம், கொடிபவுத்திரம், வேலபவுத்திரம் பக்கபவுத்திரம், இரத்தபவுத்திரம், மேகபவுத்திரம், ஆசன கண்டமாலை சரகண்டமாலை என எட்டுவிதப்படும்.

1 ஆசனப்பவுத்திரம்

முதலில் அரம்கண்டு மாறுதல், தேகத்தில் தினவு. ஆசனத்தில் குத்தல், நோவு கடுத்தல், கட்டியாகத்திரளல், பழுத்து உடைந்து செந்நீரும் சீழ்ரத்தமும் ஒழுகச்செய்யும்.

2 கொடிப்பவுத்திரம்

முதலில் ஆசனத்தில் சடையைப்போல் கண்டுவீங்கி அழுகனக்கும், பழுத்து கண்கண்ணாகவுடையும், புண்ணோரங்கள் பருத்திக்கொட்டைபோல் தோன்றும், தேகம் வெளுக்கும், அதனின்று ஒழுகும் சீழும் மிகுந்த நாற்றத்தையும் வீசும்.

3 வேலப்பவுத்திரம்

ஆசனம் வாயெடுத்து குதம் குய்யம் கூடும், அவ்விடத்தில் உள்ள நரம்புகள் புடைத்து வீங்கும் அது கரணைக்கிழங்கைப் போலத் தோன்றிப் பழுத்துடையும் அதினின்று புளித்த நீர்ச்சலம் ஒழுகும்

4 பக்கபவுத்திரம்

பீஜநடுவிலுள்ள நரம்புகளைப் பற்றி வலப்பக்கமாவது, இடப்பக்கமாவது வீங்கி துடிதுடிக்க பழுத்துடையும். அதில் செந்நீர் பாயும். நீர்தாரையால் வருத்தமுண்டாகும்.

5 இரத்தபவுத்திரம்

ஆசனத்தில் கட்டிகண்டு பழுத்து நெகிழ்ந்து உடைந்து புண்ணாகும், இன்னும் ஆண்குறியால் ஸிரணம், நீர்துளிதுளியாக இறங்கல் தேகத்தில் நாற்றம் வீசுதல் ஆகிய இக்குணங்களும் உண்டாகும்.

6 மேகப்பவுத்திரம்

பீஜத்தில் நீர்கட்டும், பழுத்துடைந்து சீழ்காலும் பாய்ச்

சலம்போல் நீர்கசியும், இன்னும் அரம் குளிர் மெய்மெக்கும். அன்னது வேகும், கைகால் கண் எரிச்சல் தோன்ற வருத்தமுண்டாக்கும்.

7 ஆசனகண்டமாலை

ஆசனத்தைச் சுற்றி திட்டு திட்டாக வீக்கம் அம்பு போல் துளைகளை வெடித்தல், சொறிந்துடன் எரிச்சல், அரம் கொய்தல், பழுத்து உடைந்து சலம் உடைக்கும் கண்கள் போல் நாவி மலசலம் ஒழுகல் ஆகிய இக்குணங்கள் உண்டாக்கும்.

8 சுரகண்டமாலை

சுரனைக்கிழங்கு போல் தோன்றி ஆசனவழியை அடைத்துக் கொள்ளும். அவ்விடத்தில் சுரந்து வீங்கும். இது உடைந்து இரத்தம் சீழ் ஒழுகும். ஆசனத்தில் அரம் தேய்த்தாற் போலும் புண்கள் போல் வீங்கும் அறுக்கின்றாற் போல் சீழ் அழுகல் நாற்றத்துடன் ஒழுகும்.

சாத்தியாசாத்தியம்

ஆசனப்பவுத்திரம், பக்கப்பவுத்திரம், வேப்பவுத்திரம், இரத்தப்பவுத்திரம், மேகப்பவுத்திரம், ஆகிய இவ்வைந்தும் சாத்தியமாகும். சுரகண்டமாலை, கொடும்பவுத்திரம், ஆசனகண்டமாலை இம்மூன்றும் அசாத்தியமாகும்.

கவனிக்க

இந்நோய்கள் ஆங்கில வைத்தியர்கள் இத்தியாதிப்படி ஆசனத்தில் உண்டாகிறது. பிஸ்டுலா-இன்-அனோ Fistula in ano என்று கூறுவர். ஆண்குறியின் மூலஸ்தானங்களில் உண்டாகிறது. பிஸ்டுலா-இன்-பெரினியோ Fistula in perineo என்று கூறுவர். மேலும் ஆசனத்திலுண்டாகும் பவுத்திரத்தைப் பற்றி பேசும்போது அதனை மூன்று வகையாகப் பிரித்திருக்கின்றனர். அதாவது பர்பெக்ட் perfect. எக்ஸ்டர்னல் பிளைண்ட் External Blind. இன்டர்னல் பிளைண்ட் Internal Blind என்று பேசப்படும்.

1 பர்பெக்ட் பிஸ்டுலா perfect fistula என்பது ஆசனத்தின் இரத்தில் கட்டியாகப் பருத்து கொம்பாட்டை

ஆ ஆசனக் குழாய்க்குள் உள்ளேயே புரையோடிருக்கும்
அப்போது காற்றுப் பிரிந்தாலும் மலங்கழிந்தாலும் இ
ப்புரையோடிய விரணத்தின் வழியே சிறிது வெளியாகு
எக்ஸ்டர்னல் பிளைண்ட் பிஸ்டியுலா. External Blind —
Fistula என்பது ஆசனத்தில் ஓரத்தில் கட்டியாகப் பழுத்து
கெம்பிட்டுடையாமல் ஆசனக் குழாய்ப்புறம் புரையா
உள்ளேயே புரையோடும்.
இன்டர்னல் பிளைண்ட் பிஸ்டியுலா Internal Blind fistula
என்பது ஆசனத்தின் ஓரத்தில் கட்டியாகப் பழுத்து ஆச
னக் குழல் வழியாயும் உள்ளேயே புரையோடி கெம்பிட்டு
உடைந்து கலக்காமலிருக்கும். இனி ஆண்குறியானட
கும் பவுத்திரத்தைப் பற்றிக் கூறுவோம். இது சிறுநீர்த்தாரையான
விரணமாகி சீழ் கொண்டு அடைத்து சிறுநீர்க் கடாமற்
செய்யும் அல்லது அவ்விரணம் புரையோடி அடிப்புற
த்தில் கெம்பிட்டு உடைந்து விரணமாகும். அப்போது சிறு
நீர் சொட்டுகளும் வயத்தில் இந்த வாசத்தின் வழியாகவும் துளி
த்துளியாகச் சொட்டும். இதுவுமல்லாமல் இந்நோய்க்கும்
பலபலமாய் கிட்டும். 4.5. துவாரங்களும் உண்டாகும்.
இத்துடனே பேருங்களிலும் உண்டாகும்.

கவி

அகஸ்தியர் வைத்தியநூல் ஆயுள்வேத இரத்தினச் சுருக்கம்

"பணித்திட்ட கிருமியால் பவுத்திரமாம் கேள்
பார்த்ததிலே இவைக்கும் பகர வேண்டாம்"
"நின்னமே நிருமியால் நாக்கிருந்தாலும்
நான் சொன்ன சூபமது பாக்குமப்பா
துன்மையுள்ள பவுத்திரமே யோகமானே
தானையாலுங் கிருமிப் பவுத்திரமே பண்ணோ" என்றும்

போகப்பத்தியமுறை

செப்பக்கேள் ஊறியதுங்கள் கொள்ளும்போது
இருமலைப்பத்தியங்கள் காக்க வேண்டும்
இப்புரையைப் பத்தியங்கள் காத்திட்டாக்கால்
தொன்றேயுமுன்னே போமில்லாவிட்டால்

செப்புடனே மண்டலமே கொன்றுவாய்முன்
கொண்டாலும் நாட்செல்லும் நோய்கள்தீர
துப்பாதே பத்தியந்தான் சொல்லக் கேளு
சாறியற்றோர்த் தினமறிந்து சொல்லாய் சொல்லே.
சொல்லுவது மாசாறுள்ள பேர்க்குந்
துவரை சிறுபயறு தூதுவளை சமேலம்
புல்லுவது சிறுகீரைப் பொன்னாங்காணி
புளியாரைக் கீரை பசளை யாரை
கல்லாரை வழுதுளங்காய் முருங்கைப் பிஞ்சு
கருணைப்பிஞ்சு சாமைமை மணித்தக்காளி
நல்லதொரு பேயனைநல்ல வடகமாமே
நாரத்தங்காய்க் கச்சல் பழுமையதாமே.
ஆமென்று மற்றேக்கு வெள்ளாட்டுவற்றல்
ஆதொண்டைக் காய்வற்றல் வாழைப்பிஞ்சு
வேமென்று புடலங்காய்ப் பீர்க்கங்காய்
விருமானொருவனியண்டம் வெள்ளாடியாம்
தாமென்று பெயராடு மெய்யுமாமே
துப்பாது காடை கவுதாரியாமே
நாடென்று சிறுமீனு மாகுஞ் சொன்னோம்.
நலமாகத் துனியோரு நறுவையாமே.
உருவைய பேர்க்குக் கோயாகுஞ் சொன்னோம்
உயரான நெய்பாலாங் கடுகேம்பாமே
பழுதில்லாச் சர்க்கரை தேன் கற்கண்டாமே
பசுவமாக் கருப்பழு மாமேம்பாய்
வழுதிலா மிளகு சீரகம் வறுத்துப்பு
மகிமை வெள்ளுள்ளியாமென்றிது
துகோயேது உடுகுத்தாலங் கேளு
துனியான வாளைக்கெண்ணெய்த் தூராதுமாமே

குருவணக்கம்

வேட்டிடும் பொருளென்றது வீணிலே யலைந்த நாயேன்
மாட்டிடும் பிழைநூறி மடந்தபுந்திற் பாற்குப்பைக்
காட்டிடுங் குருவை செய்து கல்வியையென்னைச் சேர்மேம்
பாட்டிடுங் கோசமேர்த்திப் பண்மனோ வணக்கஞ் செய்வாம்

வைத்தியர்
எம். எஸ். திருமலைக்கொழுந்துசாமி,
சித்த ஆயுர்வேத அவிழ்தாலயம்,
11-B ஜௌஸ்காரத் தெரு,
மதுரை.